# சக்கரம்

கலை இலக்கிய ஆன்மீக சிந்திப்பு ஏடு

இதழ் - 11 2019



"இனி ஒரு விதி செய்வோம்"

பெரியாழ்வார் ஆச்சிரமம்

ஸ்ரீ ராம ஜெயம்

# சக்கரம்

கலை இலக்கிய ஆன்மீக சிந்திப்பு ஏடு

இதழ் – 11, 2019

**பிரதம ஆசிரியர்**
வை.நவதரன்

**துணை ஆசிரியர்**
க.அருட்செல்வம்

**ஆலோசகர்**
பண்டிதர் பொன் சுகந்தன்

**உருவம் கொடுத்தோர்**
பா.மணிக்குமார்
ஆ.ஜெயராசா
சி.நிரூபன்
கு.விக்னேஸ்வரன்
கௌ.சித்தாந்தன்
க.லோகிதா

**தொடர்புகளுக்கு :**
சக்கரம்
பெரியாழ்வார் ஆச்சிரமம்
ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்
*Chakkarameditor@gmail.com*
*T.P:0773463358*

யாழ்ப்பாணத்தில்
விஷ்ணு வழிபாடு

ஈச்வர தத்துவம்
– விஷிட்டாத்வைத
தத்துவத்தை
அடிப்படையாகக் கொண்டது.

சிவப்பிரகாசம் சார்பு நூல்

இந்து சமூகத்தில்
தனி மனிதன்

சடங்குகளும்,
தமிழர் நம் வாழ்வும்

உளவள
ஆற்றுப்படுத்தலில்
இந்து ஆலயங்கள்

# சக்கரம்

## கலை இலக்கிய ஆன்மீக சிந்திப்பு ஏடு

## வழிபாடு

வழிபாடு என்பது வழிப்படுத்தல் என்னும் சொல்லின் அடியாகத் தோற்றம் பெற்றுள்ளது. என்று கூறுவதற்கு இடமுண்டு. 'வழிப்படுத்தல்' என்பது ஒருவனின் தளர்ச்சியுறும் சம்பவங்களை அடையாளப்படுத்தி அதிலிருந்து அவனை விடுவித்து அவன் உயர்விற்கு நெறிப்படுத்தி நல்வழி காட்டுவதாக பொருள் கொள்ள முடிகின்றது.

இதன் அடியாகத் தோன்றிய 'வழிபாடு' என்பது வழிபாடு என்று இலக்கணரீதியில் பிரித்து நோக்க முடிகின்றது. வழி என்பது பாதை என்றும் பாடு என்பது தொழிற்பெயர் விகுதியாகும். ஆகவே வழிபாடு என்னும் சொல் வழிப்படுத்தல். நெறிப்படுத்தல் என்னும் சொற்களினைப் போலவே சம பொருள் தரும் சொல்லாகக் காணப்படுகின்றது.

வழிபாடு என்னும் சொல் இறைவனை கடவுளரை வழிபடுதல் என்னும் செயல் வடிவத்துடன் அடக்கிவிடாது. சங்ககாலத்தில் கூறப்படும் ஆற்றுப்படையோடு தொடர்புபடுத்தி மக்கள் படும் துன்ப துயரங்களை இனம்கண்டு அவர்தம் இடர்களைக் களைவதற்கான செயலிற்கு கொடுக்கப்பட்ட ஒரு சொல்லாடலாகவே இதனைக் கருத வேண்டிய கருத்தியல் சூழல் காணப்படுகின்றது.

இத்தகைய தாக்கவன்மை கொண்ட சொல்லாடலில் பொதிந்துள்ள அர்த்தத்தினைக் கருத்தில் கொண்டு கணம்தோறும் வழிபாட்டில் ஈடுபட்டு ஆன்ம பலத்தினைப் பலப்படுத்துவதோடு ஆரோக்கியமாக இயங்குவதற்கும் வாழ்வதற்கும் நிலைத்திருப்பதற்கும் வழிகோலும் என்பது 'உள்ளங்கை நெல்லிக்கனி'.

– ஆசிரியர்

# யாழ்ப்பாணத்தில் விஷ்ணு வழிபாடு

**கலாநிதி. திருமதி. விக்னேஸ்வரி பவநேசன்,**
**தலைவர், முதுநிலை விரிவுரையாளர்,**
**சைவசித்தாந்தத்துறை, இந்துக்கற்கைகள் பீடம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

***அறிமுகம்***

சைவமும் வைணவமும் பாரதத்தின் இரு கண்களாக விளங்குகின்றன. சைவத் திருக்கோயில்களும் வைணவத் திருக்கோயில்களும் கலந்து விரவாத கிராமங்களே அங்கு இல்லையெனலாம். ஈழத்தைப் பொறுத்தவரையில் சிவாலயங்களே பெருமளவில் காணப்படுகின்றன. எனினும் வைணவ ஆலயங் கள் சிலவற்றையும் இங்கு காண்கின்றோம். தனியே நிறுவப்பட்ட வைணவ ஆலயங்களில் பெரும்பாலாகச் சைவப் பெருமக்களே வழிபடுவதைக் காண்கின்றோம். இவ்வழிபாட்டுமுறை சைவப் பாரம்பரியத்திற்குப் பொருத்தமாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் யாழ்ப்பாணத்துப் பிரதேசத் தில் அமைந்து காணப்படும் பிரதான விஷ்ணு ஆலயங்களாகிய வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில், துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில், கீரிமலை ஸ்ரீமந் நாராயணசுவாமி கோயில், அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் கோயில், கோப்பாய் ஸ்ரீ கிருஷ்ணர், பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில் ஆகியவற்றில் இடம்பெறுகின்ற சிறப்பு மிக்க வழிபாட்டம்சங்கள், ஆலய வரலாறு மற்றும் யாழ்ப்பாணம் வாழ் இந்துக்களுக்கும் விஷ்ணு ஆலயங்களுக்கும் உள்ள நெருக்கமான உறவுமுறை என்பன பற்றி எடுத்துக் கூறுவதே கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

***வைணவ மத வரலாறு***

விஜயனின் வருகையுடன் ஆரம்பிக்கும் மகாவம்ச காலத்திருந்தே ஈழத்தின் புராதன வரலாற்றை அறிய முடிகிறது. பண்டைய ஈழ அரசுகளின் கர்த்தாக்கள் வட இந்தியாவிலிருந்து வந்தவர்களும் இன்றைய சிங்கள மக்களின் மூதாதையர்களுமாகிய விஜயனும் அவனது தோழர்களுமே என்னும் நம்பிக்கையின் அடிப்படையிலேயே பரணவித்தான போன்றோர் ஈழத்து இந்துமதம் பற்றி ஆராய்ந்தனர்.

ஈழத்தில் பௌத்த மதம் கால்கொள்ள முன்னர் நிலவிய மதம் இந்து மதம் என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாயினும் பெரும்பாலான வரலாற்று ஆய்வாளர்களும், மத ஆய்வாளர்களும் மேற்கூறப்பட்ட வட இந்தியக் குடியேற்ற நோக்கில் தத்தமது ஆய்வுகளை இட்டுச் சென்றமையினால் அவர்களின் முடிவுகள் பக்கச் சார்பானவையாகவே அமைந்தன.

ஒரு நாட்டின் மத வரலாற்று ஆய்வுக்குப் பயன்படும் தகவல்களைத் தரக் கூடியவை இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், தொல்பொருட் சான்றுகளே ஆகும்.

ஈழத்து வைணவ மத வரலாறு பற்றிய ஆதாரங்கள் மிக அருகியே காணப்படுகின்றன. இவ்வகையில் இதிகாசங்கள் பாளி மொழியில் அமைந்த பௌத்த மத வரலாற்று நூல்களான தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம், மற்றும் பிற நாட்டு யாத்திரிகள் குறிப்புக்கள் என்பன இலக்கிய ஆதாரங்களாகின்றன. அத்துடன் சிங்கள மொழியில் அமைந்த பண்டைய ஈழத்துப் பாடல்களும், தூது காவியங்களும், இந்து ஆலயங்களின் தல புராணங்களும், மான்மியங்களும், பிற்பட்ட காலத்தமிழ் இலக்கியங்களும், மரபு வழிக்கதைகளும் மேலும் துணை புரிகின்றன. எனவே பண்டைய ஈழத்து வைணவ மதம் பற்றிய ஆய்விற்குத் தேவையான தகவல்களையும் தருவதாக இலக்கிய கல்வெட்டு தொல்லியற் சான்றுகள் அமையவில்லை என்பது தெளிவாகின்றது. இக்கருத்தினையே கா. இந்திரபாலா அவர்களும்.

"யாழ்ப்பாண வரலாற்றை ஆராய்பவர்கள் எதிர்நோக்கும் முக்கியமான பிரச்சினை போதிய சான்றுகளில்லாப் பிரச்சினையே. இதனால் எதனையும் திடமாக்க கூற முடியாதுள்ளது. கல்வெட்டுக்களையும் பிற தொல்பொருள் ஆதாரங்களையும் யாழ்ப்பாண இராச்சியப் பிரதேசத்திலே தேடிப் பெறும் வரை வெறும் ஊகங்களுடன் நாம் திருப்தி கொள்ள வேண்டியுள்ளது" எனச் சுட்டிக் காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் "வைணவர்" என்ற ஒரு பிரிவினரைக் குறித்துச் சொல்லக் கூடிய நிலையில்லா விடினும் வைணவம், சைவம் போன்ற தனித்ததோர் சமயமாகக் கடைப்படிக்கப்படாது விடினும் வரலாற்றுப் புகழ் மிக்க விஷ்ணு ஆலயங்கள் சில இருப்பதும் சைவர்களும் அங்கு சென்ற வழிபடுவதும் சிறப்பித்துக் கூற வேண்டியதாகும்.

### *விஷ்ணு என்ற சொல்லின் பொருள்*

"விஷ்ணு" என்ற சொல்லின் தோற்றம் ஆரியர்களுக்கு முற்பட்ட காலத்திலே உள்ளது என பெர்ஸிலுஸ்கி, ருபன்கீயூபர் போன்ற அறிஞர்கள் மொழியியற் சான்றுகளுடன் நிறுவியுள்ளனர். இவர்களின் கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு இந்து ஆய்வு தமிழ் இலக்கியப் பின்னணியில் அணுகுகின்றது. மிகப் பழமையான இலக்கியமாகிய தொல்காப்பியம் முல்லை நிலக் கடவுளாக "மாயோன் மேய காடுறை உலகமும்" என்று கூறுகிறது. இதனை இருக்கு வேதம் கூறும் "ஆநிரை காப்பவன் விஷ்ணு" என்ற கருத்துடன் ஒப்பிட்டுக் காண வேண்டும்.

விஷ்ணு என்னும் சொல்லே மிகுதியான ஊகங்களுக்கு இடம் தருவதாக உள்ளது. தம். புளும்பீல்டு என்பவரும் ஹெச். கோல்டன் ரெக் என்பவரும் இச்சொல்லிற்கு "உலகத்தின் பின்பகுதியைக் கடப்பவர்" அல்லது "பூமியின் நிலப்பகுதியைக் கடப்பவர்" என்ற பொருள் கூறினார்கள். மேலும் புராணங்கள் விஷ்ணு என்றால் "நுழைந்து அல்லது ஊடுருவி" நிற்பவன் என்ற பொருள் தருகின்றன.

இச்சொல்லின் பிறப்பு எங்குள்ளது என அறுதியிட்டுச் சொல்ல இயலாது. என்றாலும் அசையும் தன்மையைக் குறிக்கக் கூடிய விண்ணுலகக் கோட்பாடு

என்பதை இச்சொல் குறிப்பாதாக இக்கோட்பாடுகள் பொதுவாக ஒத்து நிற்கின்றன. தமிழில் "இறைவன்" என்ற சொல் விஷ்ணு என்னும் சொல்லிற்கு இணையானது என்று கொள்ளலாம். "இறு" என்ற அடிச் சொல்லிற்கு "ஊருவி நில்" என்று பொருள் நற்றிணைக் கடவுள் வாழ்த்துப் பாடல் எல்லாவற்றிலும் ஊடுருவுள்ள விஷ்ணுவின் தன்மையையும் ஒளித்தன்மையையும் விளக்கும் வண்ணம் "விசும்பு மெய்யாகத் திசைக்கையாகப் பசுங்கதிர் மதியமொடு சுடர் கண்ணாக" என்று பாடுகிறது.

தொல்காப்பியம் முல்லை நிலத்தின் கடவுள் திருமால் என்கிறது. இங்கு திருமாலைத் தொல்காப்பியர் "மாயோன்" என்று குறிப்பிடுகிறார். மாயோன் என்ற சொல்லுக்கு நச்சினார்க்கினியார் "கடல் நிற வண்ணன்" என்ற கூறுகிறார். பதிற்றுப்பத்தின் ஏழாம்பத்தின் பதிகம் "மாயவண்ணன்" என்ற திருமாலைக் கூறுகிறது. பசுக் கூட்டங்களைக் காப்பவன் விஷ்ணு என்று இருக்கு வேதம் கூறுகிறது.

ஆகவே "விஷ்ணு" என்னும் சொல்லின் சொற்பிறப்பியல் வரலாறு முழுவதும் ஆசிரியர்களோடு தொடர்புடையதாக இல்லை. ஆரியர்களுக்கு முற்பட்ட உலகிலே முடிவு டாக்டர் சுனித்குமார் சட்டர்ஜியின் கருத்தினால் வலிமை பெறுகின்றது. உலகம் முழுவதையும் தன்னுடைய ஒளிக்கதிர்களினால் நிரப்பும் சூரியக் கடவுள் என்ற கோட்பாட்டுடன் விஷ்ணு நின்று விடவில்லை. அவன் ஆகாயக் கடவுள். நீல நிறத்தை உடையவன் என்ற திராவிடக் கோட்பாட்டையும் உள்ளடக்கியவன் விஷ்ணு என்கிறார் சட்டர்ஜி.

***விஷ்ணு வழிபாடு***

விஷ்ணுபகவான் ஆன்மாக்களை ஈடேற்றும் பொருட்டும் தர்மம் குறைந்து அதர்மம் மேலோங்கும் போதும் பல்வேறு அவதாரங்களையும் எடுக்கின்றார். இதற்கு பகவத்கீதை சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. கீதையில் கண்ணன் அகங்கார மமகாரங்களை நீக்கி பற்றுக்களைத் துறந்து தன்னையே சரணடைபவர்களைத் தான் காப்பாற்றுவதாகக் கூறுகின்றான். "நல்லோரைக் காக்கவும் கொடியோரை அழிக்கவும் தருமத்தை நிலைநாட்டவும் நான் யுகந்தோறும் அவதரிக்கின்றேன்" எனப் பகவான் கீதையில் கூறுகிறார். உயிர்கள் மீது கொண்ட பேரருளினால் விஷ்ணு உலகிலே அவதரிக்கின்றார் என்பது வைணவர்களது நம்பிக்கையாகும். மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனன், பரசுராமன், பலராமன், இராமன், கிருஷ்ணன், கல்கி என்பன விஷ்ணு எடுத்த அவதாரங்கள் ஆகும்.

நீர்வாழ் உயிரிலிருந்து தொடங்கிப் படிப்படியான வளர்ச்சி நிலையில் தெய்வ நிலைவரை இந்த அவதாரங்கள் பரிணாமம் அடைந்து செல்வதாகக் குறிப்பிடுகின்றது. ஒவ்வொரு அவதாரமும் தேவர்கள், மானிடர் ஆகியோரின் இடர்களைப் போக்கவே எழுந்துள்ளன என வரலாறுகள் கூறுகின்றன. இவற்றுள் இராம அவதாரமும் கிருஷ்ண அவதாரமும் எல்லோராலும் போற்றப்பட்டு வருகின்றன. ஆலயங்களிலும் இவ்விரு அவதாரத் திருமேனிகளுமே முதன்மை பெற்று வழிபாட்டுக்குரியவையாகப் போற்றப்பட்டு வருகின்றன. மேலும் இவ்விரு

அவதாரங்களுக்கும் இராமாயணம், பாரதம் என்னும் இதிகாசங்கள் தோன்றுவதற்கு வழிவகுத்துள்ளன.

புராண மரபுப்படி விஷ்ணுவின் அவதாரங்கள் எண்ணிலடங்கா எனக் கூறப்படுகின்றது. ரிஷிகள், மனுக்கள், தேவர்கள், மனுவின் புத்திரர்கள் யாவரும் விஷ்ணுவின் அம்சங்களே எனக் கூறப்படுகின்றது. இவ்வகையில் அவதாரங்கள் அவதாரம், ஆவேசம், அம்சம் என மூவகையாகப் பிரித்துக் கூறப்படுகின்றன. விஷ்ணு தனது முழு வல்லமையுடன் தோற்றுவது அவதாரமாகவும், தற்காலிகமாக தனது சக்தியினை இறைவன் ஓர் உருவில் புகுத்தி நோக்கம் முடிந்ததும் வீட்டுக்கு கொள்வது ஆவேசமாகவும் கடவுளின் கருவிகளாய் உள்ளதும், அவ்வப்போது தோன்றி துஷ்டநிக்கிரக சிஷ்டபரிலானம் செய்வது அம்சமாகவும் கருதப்படுகிறது. சங்கு, சக்கரம் என்பவற்றின் தோற்றமே அம்சமாகவும் நரசிம்மம், வாமனன் முதலியன ஆவேசமாகவும் கருதப்பட்டு வருகின்றன.

### *யாழ்ப்பாணத்தில் விஷ்ணு வழிபாடு*

யாழ்ப்பாணத்தில் வைணவம், சைவம் போன்று தனித்தோர் சமயமாக கடைப்பிடிக்கப்படாது விடினும் விஷ்ணு ஆலயங்கள் அமைந்துள்ளமையும் சைவர்களும் அங்கு சென்று வழிபடுவதும் சிறப்பம்சமாக விளங்குகின்றன. இவ்வகையில் யாழ்ப்பாணத்தில் சிறப்படைந்து விளங்கும் விஷ்ணு வழிபாட்டுத் தலங்களாகிய வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமாள் கோயில், துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில், கீரிமலை ஸ்ரீமத் நாராயண சுவாமி கோயில், பொன்னாலை வரதராஜப்பெருமாள் கோயில், அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீநாக வரத நாராயணர் கோயில், கோப்பாய் ஸ்ரீ கிருஷ்ணர் கோயில் ஆகியன குறிப்பிடத்தக்கன. இவ்வாலயங்களில் பிரதான வழிபாட்டு சிறப்புமிக்க ஆலயங்களில் வழிபாட்டு அம்சங்கள் பற்றி ஆராய்வது பொருத்தமானதாகும்.

### *யாழ்ப்பாணம் ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயம்*

#### *அமைவிடம்*

யாழ்ப்பாண மாவட்டத்தின் வண்ணை பிரதேசத்தில் புகழ் மிக்க ஆலயமாக இவ்வாலயம் திகழ்கிறது. கிழக்கே மணிக்கூட்டு வீதியும், மேற்கே கஸ்தூரியார் வீதியையும், வடக்கே நாவலர் வீதியையும் எல்லையாகக் கொண்டு அதன் மையப் பகுதியில் இவ்வாலயம் அமைந்துள்ளது. இவ்விடத்தை ஆதியில் "அடியார்க்கு நல்லான் வரம்பு" என வழங்கினர்.

#### *ஆலயத்தோற்றம்*

ஈழத்தின் தலைசிறந்த வைணவ ஆலயங்களுள் இவ்வாலயம் மிகவும் பழமை வாய்ந்த ஒன்றாகும். கி.பி 1665ல் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து நெசவுத்தொழிலை விருத்தி செய்வதற்காக "பத்மசாயி" செட்டிப்பிள்ளைகளை வண்ணையில் குடியேற்றியதாக இராசநாயகம் என்பவர் கூறியுள்ளார். ஆனால் 1347ல் குணபூசனசிங்கையாரின் நெசவுத்தொழிலை

வளம்படுத்த ஆந்திர நாட்டிலிருந்து பண்டாரவளச் செட்டிப்பிள்ளைகளை அழைத்து வந்து வண்ணையில் குடியேற்றியதாக ஐதீகக் கதை கூறுகிறது.

இக்கோயிலின் தோற்றம் பற்றிய செய்தியில் பண்டாரவள செட்டிப்பிள்ளைகளின் சரித்திரமும் இவ்வாலயச் சரித்திரமும் ஒன்றோடு ஒன்று தொடர்புபடுகின்றன. ஒல்லாந்தார் நெசவுத் தொழிலை விருத்தி செய்வதற்காக தமிழ் நாட்டின் ஆந்திரப் பிரதேச மக்களைக் கொண்டு வந்து வண்ணைப் பிரதேசத்தில் குடியமர்த்தியதாகக் கூறப்படுகின்றது. எனவே இவ்வாலயத்தின் தோற்றம் இந்து, வைணவ வழிபாட்டு முறையின் வளர்ச்சியாகக் காணப்படுகின்றது. கி.பி 1820ல் இருந்தே இக்கோயிலுக்கு முறையாக நிலங்கள் தர்ம சாதன செய்யப்பட்டு இருப்பதை அறிய முடிகின்றது.

19ம் நூற்றாண்டிலிருந்து இக்கோயில் ஆதீன மகா சபையாரால் முறையாக நியமிக்கப்பட்ட தர்ம கர்த்தாக்களால் பரிபாலிக்கப்பட்டு வந்துள்ளது. இக்கோயில் உள்ள இடத்தையும், கோயிலுக்கு அருகிலுள்ள இடங்களையும் "அடியார்க்கு நல்லான் வரம்பு" என்று குறிப்பிடுவார். வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமாள் மூலஸ்தானத்தில் ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீவெங்கடேசப்பெருமாள் அருள் பாலிக்கின்றார். புராதன காலத்தில் வணங்கப்பட்ட மூல விக்கிரகம் இன்றும் திருமாலின் பக்கமாகக் காணப்படுகின்றது. இவ்வாலயத்தின் விருட்சம் பலா மரமாகும்.

வைஷ்ணவ ஆகம முறைப்படியான கோயில் கிரியை முறைகளே இங்கு பின்பற்றப்படுகின்றன. இவ்வைகுண்ட நாதர் ஆலயத்தில் நித்திய, நைமித்திய கிரியைகள் சிறப்பாக நடைபெறுகின்றன. அத்துடன் கிருஷ்ண ஜெயந்தி, ஸ்ரீராம நவமி, வைகுண்ட ஏகாதசி, நவராத்திரி, சங்கராந்தி, கோ பூசை, உரியடி உற்சவம் மற்றும் தீப பூசை முதலான விழாக்கள் மிகக் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன. ஸ்ரீ வைகுண்டம் முதலான 108 தலங்களைப் போல ஈழத்தில் அருள் மிக்க வைணவ தலமாக இத்தலம் விளங்குகின்றது.

***ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயம்***

இலங்கையில் வட பகுதியில் அமைந்துள்ள பருத்தித்துறையில் வல்லிபுரப் பகுதியில் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் அமைந்துள்ளது. வரலாற்று பெருமைமிக்க இவ்வாலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மூன்றும் ஒருங்கமைந்த பிரசித்தி பெற்ற புராதன திருத்தலமாகக் காணப்படுகின்றது. வல்லிபுரம் என்ற பெயர் இப்பிரதேசத்திற்கு எவ்வாறு ஏற்பட்டது என்பது பற்றிப் பல கருத்துக்கள் நிலவுகின்றன. "வல்லியம்" என்பதற்கு "ஆயர்பாடி" என பிங்கலந்தை நிகண்டிலே கூறப்பட்டுள்ளது. "வல்லி" என்ற சொல்லிற்கு ஆயர்பாடி என்ற கருத்தை ஆனந்தவிகடன் அகராதியிலும் "இடைச்சேரி" யென தமிழ் அகராதியிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. "புரம்" என்பதற்கு "கோயில்" எனப் பொருள் வழங்கப்படுகின்றது. எனவே வல்லிபுரக் கோயில என்பது ஆயர்பாடிக் கோயில் என்ற பொருளைத் தருகிறது. வல்லியத்தேவன் பெயரைக் குறிக்கும் முகமாகவே இரு பகுதியில் குடியேறிய மக்கள் இக்கிராமத்தை வல்லிபுரம் என அழைத்ததாகவும் கூறப்படுகிறது. இம்மக்கள் தெலுங்கர்களாகவும், வைணவ

மதத்தைப் பின்பற்றுவோராகவும் காணப்பட்டமையினால் இப்பகுதியில் வைணவ வழிபாடு காணப்பட்டது.

இங்குள்ள இறைவனை ஆழ்வார் என்று அழைக்கப்படுவதும் சிந்திக்கத்தக்கது. ஆழ்வார்கள் எனும் பெயர் பொதுவாக திருமால் அடியார்க்கே வழங்கப்படுவது மரபாகக் காணப்படுகின்றது. எனினும் திருமாலையும் "ஆழ்வார்" என்று குறிப்பிட்டுள்ளனர். சோழப்பெரு மன்னர் காலச் சாசனம் ஒன்றில் "ஆழ்வார் திருவரங்கத்தேவர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. "ஆழ்வார்" என்ற சொல்லுக்கு "சூரின்" என்ற ஒரு பொருளும் உண்டு. வேதங்களில் சூரியனுடன் தொடர்பு கொண்ட தெய்வமாகவே விஷ்ணு போற்றப்படுகின்றார்.

வல்லிபுர நாதர் ஆழ்வார் என அழைக்கப்பட்டதற்கான காரணம் ஆய்விற்குரியது. இலங்கையின் வடபகுதியும், இந்தியாவின் சிலபகுதிகளும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் "நாகர்" என்ற இனத்தவரின் குடியிருப்புக்களை கொண்டு விளங்கியது. ஆதிக்குடிகளாகிய நாகர் வாழ்ந்த பிரதேசங்களுள் வல்லிபுரப் பகுதியும் ஒன்றாகும். எனவே வல்லிபுர ஆழ்வாரின் ஆதித்தோற்றம் நாகர்களின் ஆதி வணக்கமான சூரியக்கடவுளாக இருந்திருக்க வேண்டும்.

இலங்கையை ஆண்ட தேவநம்பிய தீசன் அசோகனோடு நட்பு பூண்டு பௌத்த மதத்தை தழுவிய பின் இலங்கையிலே பௌத்தமதம் வேறூண்ட ஆரம்பித்தது. இவ்வாறு ஈழத்தில் பௌத்தம் பரவிய போது நாகர் குடியிருப்பாகிய வல்லிபுரப் பகுதியிலும் மதம் மாற்றம் நிகழ்ந்து கி.பி 2ம் நூற்றாண்டளவில் பௌத்த விகாரை ஒன்று இவ்விடத்தில் இருந்தது என்பதை வல்லிபுர பொற்சாசனம் கூறியுள்ளது. எனவே இத்தகைய சூழ்நிலையில் ஆதியில் இருந்து வாழ்ந்த நாகர்கள் சூரியபகவானுக்கு அமைத்த கோயில்கள் யாவும் பௌத்த விகாரைகளாக மாறிய பின்னர் வைணவ மக்கள் குடியேற்றத்தால் நரசிங்கப்பெருமாள் கோயில்களாக மாறியிருக்க வேண்டும். இன்றும் நாக வழிபாடு பௌத்த சமயத்துடன் பெரிதும் தொடர்புபட்டுக் காணப்படுவதற்கு நாகர் தொடர்பே காரணமாக இருக்க வேண்டும்.

வல்லிபுர ஆழ்வார் ஆலயம் புராதன ஈழத்தின் வட பாகத்தில் இருந்த யாழ்ப்பாண அரசு கால சிங்க ஆரிய சக்கரவர்த்திகளின் காலத்திற்கு முற்பட்ட காலத்தில் உருவானது. இவர்களின் இராசதானியாகிய "சிங்கபுரம்" என்பது ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் பாங்கிலே உருவாலும், திருவாலும் உயர்ந்து விளங்கியது என்பது சரித்திர உண்மை. புராதன விஷ்ணு ஆலயம் விசேடமாக வடமராட்சி பிரதேச மக்களாலும் பொதுவாக ஈழத்தமிழ் மக்களாலும் வழி வழியாகப் போற்றப்பட்டு வருகிறது. இத்தகைய பெரும் சிறப்புடைய இவ்வாலயத்தின் வரலாற்றுப் பெருமை வடமொழி ஸ்கந்த புராணத்திலே தட்சண கைலாய மான்மியத்தில் ஸ்ரீ வல்லிபுர வைபவத்தில் கூறப்பட்டுள்ளது.

இவ்வாலயத்தில் ஒரு விசேடம் யாதெனில் எத்தனை காலப் பூசைகள் நடைபெற்றாலும் அத்தனை காலப் பூசைகளிலும் விநாயகருக்குப் பூசை நடைபெறும். இது ஒரு மரபாக உள்ளது. வைணவ சின்னமான ஸ்ரீ சக்கர ஆயுதம் உள்ள ஆலயத்தில் இது சிறப்பம்சமாகும். இங்கு மகோற்சவமானது புரட்டாதி மாதத்தில் வருகின்ற பூர்வபட்ஷ பூரணை தினத்தன்று "கடல் தீர்த்தம்" அமையும்.

வண்ணம் கணிக்கப்பட்டு கொடியேற்றம் இடம்பெறும் கடல் தீர்த்தம் பதினாறாவது நாளிலும் அதனை அடுத்து மறுநாள் கேணித் தீர்த்தமும் நடைபெறும்.

கொடியேற்றத்திற்கு மூன்று தினங்கள் முன்பதாக ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்கு மேற்கே பெரிய குறுக்கட்டுக்கு அப்பால் உள்ள குறுக்கட்டு விநாயகர் ஆலயத்திற்கு வல்லிபுர ஆலய கொடியேற்றக் குருக்கள் கன்னிக்கால் நாட்டி பாலிகை, நவதானியம் விதைத்து மூஷிகக் கொடி நாட்டி தீபாராதனை செய்து திரும்புவார். இவ்வாலயத்தில் தேர்த்திருவிழாவினை அடுத்து இடம்பெறும் கடல் தீர்த்தம் இக்கோயிலின் வரலாற்றினை நினைவு கூறும் பொருட்டு நடைபெறுவதாக அமைகின்றது. “வல்லி” என்னும் கன்னிகையின் நாக சாபம் நீங்குவதற்கு விஷ்ணு மீனாகத் தோன்றி இக்கன்னிகையின் மடியில் விழுந்தது இக்கடல் பரப்பிலாகும். இதன் நினைவாகவே இவ்விழா கொண்டாடப்பட்டு வருகின்றது. இவ்வாலயத்தின் மூலஸ்தானத்தில் சக்கரமே பூஜிக்கப்படுகிறது.

ஈழ வரலாற்றில் வல்லிபுர தேசம் முக்கியத்துவம் பெற்றதாக காணப்படுகின்றது. சுவாமி ஞானப்பிரகாசரின் கருத்துப்படி பிரதேசமே உக்கிரசிங்கனின் இராசதானியாக சிங்கை நகர் எனக் கூறப்பட்டுள்ளது. இக்கோயிலுக்குரிய நிலத்தில் பழைய கட்டிடத்தின் அழிபாடுகளுக்கிடையிலே 1936ம் ஆண்டளவில் வல்லிபுர பொன் ஈட்டுச் சாசனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இச்சாசனம் இப்போது கொழும்பு தேசிய நூதன சாலையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

வல்லிபுர ஆழ்வார் கோயில் அமைந்துள்ள கிராமத்திலும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் வைணவச் செல்வாக்கின் பிரதிபலிப்பாக இங்கு உள்ளவர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. ஆழ்வாப்பிள்ளை, பாலகிருஸ்ணன், லட்சுமி. நாராயணப்பிள்ளை, கோவிந்தர். நிருஷ்ணசாமி, முரளி, யசோதா, கோகுலன், கோபாலன் போன்ற பெயர்கள் இதற்குச் சான்றாகும்.

இங்கு நடைபெறும் கிருஷ்ண ஜெயந்தி விழா மிகச் சிறப்புடையது. இவ்வாலயத்தில் உள்ள அழகிய விமானத்தில் பஞ்ச முக அனுமாரின் திருவுருவம் காணப்படுகிறது. ஸ்ரீ வல்லிபுர ஆழ்வாரை வழிபடும் பக்தர்கள் ஆலய வழிபாட்டின் பின் ஆஞ்சநேயரின் திருமாளிகை முன் அமர்ந்து அவரின் திருநாமத்தை 108 முறை உச்சரித்து வணங்கினால் அவர் கேட்கும் வரங்களை அளிக்கும் பெருந்தகையாவர். இவ்வகையிலே தானென்று மருதனார் மடத்தில் ஆஞ்சநேயருக்கு தனியான ஆலயம் அமைக்கப்பட்டு சிறப்பான பூசைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

### *பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில்*

யாழ் நகரிலிருந்து ஒன்பதாவது மைல் தொலைவில் அமைந்துள்ள பொன்னாலை. இங்கு மேற்குத் திசையிலே ஸ்ரீ வரதராஜப்பெருமாள் கோ அமைந்துள்ளது. இவ்வாலயம் கடலையும் கடல் சார்ந்த இடத்தையும் சூழ் நெய்தல் நிலத்தின் மாண்பை எமக்கு உணர்த்துகிறது. ஈழத்தில் உள்ள

வாய்ந்த திருத்தலங்களில் ஒன்றாக பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆலயம் விளங்குகின்றது. இவ்வாலய வரலாற்றினை வடமொழியிலுள்ள கந்தபுராணத்தின் ஒரு பகுதியான தட்சண கைலாய மான்மியம், பறாளை விநாயகர் பள்ளு முதலியன நூல்களிலும் மற்றும் கலை வடிவங்களின் துணை மூலம் அறிய முடிகிறது. இதுவரை கிடைக்கப் பெற்றுள்ள சான்றுகளின் படி இத்தலமானது கி.பி 15ம் நூற்றாண்டுக்கு முன்பே புகழ் பெற்றிருந்தது எனக் கருத முடிகின்றது.

பொன்னாலை "சுவர்ணாலய பரிசதுரங்கம்" எனவும் அழைக்கப்படும் சிறப்புடையதாகவும் விளங்குகின்றது. அருட்பெருமையும் வரலாற்றுப் பெருமையும் மிக்க இத்தலத்தின் நோக்கமும் பெருமையும் தட்சண கைலாய புராணத்திலே பொன்னாலை பெருமை உரைத்த படலம் என்னும் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது. திருமாலின் ஒவ்வொரு அவதாரத்திற்கு கிரகணங்கள் ஒவ்வொன்றுடன் தொடர்புடையதாக அடியார்கள் கருதுகின்றனர். இவ்வகையில் கூர்ம அவதாரத்திற்கும் சனிக்கிரகத்திற்கும் அதிக தொடர்பு உண்டென நம்புகின்றனர். இதனால் இவ்வாலயத்தில் நடைபெறும் சனி வழிபாடு பிரசித்தி பெற்றதாக விளங்குகின்றது. ஆலயத்தின் தல விருட்சம் வன்னி மரமாகும்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் முப்பெருமைகளைக் கொண்டதாக இத்தலம் விளங்குகின்றது. மூலமூர்த்தியாகிய வரதராஜப்பெருமாள் இந்திரன், விசுவாமித்திரர், லக்சுமியால் வழிபடப்பட்ட பழமைமிக்கவர் மூலஸ்தானத்தில் வரதராஜப்பெருமாள் பூ லக்சுமி, மகா லக்சுமி சமேதராக வீற்றிருக்கின்றார். இம்மூன்று உருவங்களும் வெவ்வேறு காலத்தவையாக இருக்க வேண்டும் என கலை வல்லுனர்கள் கருதுகின்றனர். அடுத்து எழுந்தருளப்பட்டிருக்கு இரு சக்திகளுடன் கூடிய வரதராஜப்பெருமாள் உற்சவ மூர்த்தியாவார். இவர் மூல மூர்த்தியை விட பழமையானவர் எனக் கருதப்படுகிறார். மூலஸ்தான மூர்த்தியானவர் சங்கு, சக்கரம், அபயகரம், கதாயுதம் கொண்ட நான்கு கரங்களையுடையவராகவும் விளக்க உற்சவ மூர்த்தியானவர் சங்கு, சக்கரம், அபயகரம் கொண்டவராகவும் மறு கரத்தை தொங்க விட்டவராகவும் காணப்படுகின்றார். இதனை ஒத்த வடிவம் மதுரை காஞ்சிபுரம் வரதராஜப்பெருமாள் ஆலயத்திலும் காணப்படுகின்றது குறிப்பிடத்தக்கது.

"பொன்னாலயம்" என்ற இவ்வாலயத்தின் பெயரே பின்னர் இவ்வூருக்கு வந்திருக்கலாம் என நாம் கருத இடமுண்டு. தேவர்களுக்குத் தலைவனான இந்திரன் இப்பதியில் சாபவிமோசனம் பெற்றமையினாலும் பொன்னொளி வீசும் விமானம் ஆகாயத்தில் தோன்றியமையாலும் அவ்விடத்திற்கு "சுவர்ணாலயபுரி" என்ற பெயர் ஏற்பட்டது. எனவே சுவர்ணாயத்தின் தமிழாக்கமே பொன்னாலயம் எனக் கருதப்பட்டது. பரிவார மூர்த்திகளும் இவ்வாலயத்தில் சிறப்புமிக்கவையாகக் காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் உள்ள ஏனைய ஆலயங்களில் பெரும்பாலும் மூல மூர்த்தியே அதிமுக்கியத்துவம் பெறுகின்றன. ஆனால் இவ்வாலயத்தில் பரிவாரத்தெய்வங்களும் சிறந்த புகழும் மகிமையும் பெற்றுக் காணப்படுகின்றன.

இவ்வாலயத்தில் கருப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகா மண்டபம், சோபன மண்டபம், கருட மண்டபம், தம்ப மண்டபம், யாக மண்டபம், வசந்த மண்டபம், விரசார மண்டபம், நிருத்த மண்டபம் என்பன சிறப்புற்று விளங்குகின்றன.

## *அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலயம்*

அளவெட்டி என்னும் கிராமத்தில் சைவமும் தமிழும் சிறந்து விளங்கும் நாகேஸ்வம் என்னும் திவ்விய திருப்பதியில் கோயில் கொண்டு எழுந்தருளி இருப்பவரே ஸ்ரீமற்றருகே வெண்நாகமரமாகத் தோன்றி சோதியாக மாறிய காட்சியைக் கண்ட அன்பர் ஒருவரால் வணங்கப்பட்டது என்பது ஐதீக வரலாறு. அருட்கவி விநாசித்தம்பி அவர்கள் இவ்வாலயத்திற்கு அருகே குடியிருக்க வந்ததும் 14.02.1953ம் ஆண்டு தொடக்கம் அவரை வழிபடத் தொடங்கியதாக அவர் வாக்கின் மூலமாக அறிய முடிகின்றது. இவ்வாறு ஆரம்பித்த வழிபாட்டின் வளர்ச்சி இன்று நாம் காணும் கோபுரத்துடன் கூடி ஆலயமாக காட்சி அளிக்கிறது.

இவ்வாலயத்தில் எம்பெருமான் நாராயணர் நடத்திய அற்புதங்கள் சொல்லில் அடங்கா "மூர்த்தி சிறிது கீர்த்தி பெரிது" என்பர் ஆன்றோர். இதற்கு சான்று பகருவதாய் உள்ளது எம்பெருமான் நிகழ்த்திய அற்புதங்கள் இவ்வகையில் சிறப்பு மிக்க அற்புதம் இறந்த பாலகனை உயிர் பெறச் செய்தமையாகும். இக்கலியுகத்தில் இப்படியும் நிகழ்ந்ததோ என எண்ணிப் பார்க்கும் போது நாராயணனின் அருள் வெளிப்படுகின்றது. இந்நிகழ்வு 1976ஆம் ஆண்டு 4 வயதுச் சிறுவன் மரணித்த பின் பெற்றோர் நாராயணனின் ஆலயத்திற்குக் கொண்டு வந்து உளமுருகி வேண்ட கருணா மூர்த்தியாகிய நாராயணனின் அருளால் பாலகன் உயிர் பெற்றான். அந்தச் சிறுவன் யாழ்ப்பாணத்திலுள்ள சங்கானையைச் சேர்ந்த துரைச்சாமியின் மகன் சுவசதன் ஆவார். இவ்வாறாக பல அற்புதங்களைப் புரிந்து தன்னையே தஞ்சமென நம்பி வந்த அடியவர்களுக்கு அருள் சொரிந்த வண்ணமுள்ளார்.

1.1.1969 இல் இக்கோயில் சிறியளவில் கட்டப்பட்டது. பின்னர் 1979ம் ஆண்டு தொடக்கம் அலங்காரத் திருவிழா வெகுவிமர்சையாக இடம்பெற்று ஆலயம் வளர வளர அடியார் கூட்டம் பெருகுகிறது. நாராயண மூர்த்தியின் அருள் பெருகியது. அடியார்கள் தம் துறைகளை இரந்து எம்பெருமானிடம் பல இஷ்ட சித்திகளைப் பெற்றன.

இவ்வாறாக வளர்ச்சியடைந்த ஆலயம் நாராயணன் அருளால் மகோற்சவம் நிகழும் பாக்கியத்தைப் பெற்றது. இதன் பிரகாரம் கொடியேற்றம், சித்திரத்தேர், சப்பரம் போன்ற இடம்பெறுகின்றன. 27.08.1986 இல் புதிய சித்திரத்தேரில் பூதேவி, ஸ்ரீதேவி சமேத ஸ்ரீநாகவரத நாராயணப்பெருமாள் ஆரோகணித்து அடியார்கள் அனைவருக்கும் அருள் மழை பொழிந்தார். 20.10.1988ல் பெரிய மணிக்கூட்டுக்கோபுரம் அமைக்கப்பட்டது. 22.04.1999ல் நாராயண மூர்த்தியும் ஏனைய பரிவார மூர்த்திகளும் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு 01.07.1999ல் மகா கும்பாபிஷேகம் இடம்பெற்றது.

கோப்பாய் வடக்கு கொழுவியம் பதியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சக்கரத்தாழ்வார் குறிப்பிடத்தக்க சிறப்புமிக்க விஷ்ணு ஆலயமாகத் திகழ்கிறது. இவ்வாலயத்தில் 1958.04.10 அன்று சக்கரம் வைக்கப்பட்டது. இங்கு விஷ்ணு பக்தர்கள் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றியும் மற்றும் பல உதவிகளைப் புரிந்தும் அவ்வாலயத்துடன் மிக நெருக்கமான உறவைப் பேணி வருவதை இன்றும் நாம் அவதானிக்க முடிகிறது. இவ்வாறாக யாழ்ப்பாணத்தில் இன்று விஷ்ணு வழிபாடானது சைவத்துடன் இணைந்த நிலையில் மிகவும் வளர்ச்சியடைந்துள்ளதை இவ்வாய்வினூடாக தெளிவுபடுத்த முடிகிறது.

**அடிக்குறிப்புக்கள்**

1. இந்திரபாலா, கா., யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம், 1972 முகவுரை
2. இராசநாயகம், யாழ்ப்பாணச்சரித்திரம்
3. நாராயணசாமி, வி.என்.சி., வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமாள் சித்திரத்தேர் திருவிழா தினபதி, 27.09.1982, ப - 5
4. வசந்தா நடராஜன், திருமதி, ஈழத்திருக்கோயில்கள் வரலாறு, மரபுப்பகுதி – 1, மணிமேகலைப் பிரசுரம், சென்னை, 2003, ப – 291
5. மேலது, ப - 292

☼ ☼ ☼

# ஈச்வர தத்துவம் – விஷிட்டாத்வைத தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது.

**கலாநிதி.இ.ஜெயந்திரன்**
விரிவுரையாளர்,
சைவசித்தாந்தத்துறை
இந்துக் கற்கைகள் பீடம்
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

***அறிமுகம்***

இந்தியதத்துவப்பரப்பில் தோற்றம் பெற்ற தத்துவக்கொள்கைகளில் விஷிட்டாத்வைதம் தனித்துவமான இடத்தினைக் கொண்டுள்ளது. இராமானுசரின் அபார ஆற்றலால் வேதத்தில் காணப்படும் மஹாவாக்கியங்களுக்கு வைணவ பாரம்பரியமாக எழுதப்பட்ட உரையே விஷிட்டாத்வைதம். சர்வ உலகங்களையும் கட்டிக்காக்கும் ஒப்பற்ற பரம்பொருளாக மகாவிஷ்ணுவினை இத்தத்துவம் கூறுகிறது. விஷ்ணு சேதன (உயிருள்ள பொருட்கள்) அசேதன (சடவுலகம்) உலகங்களைத் தனது உடலாகவும் தான் அவ்வுடலில் உள்ள உயிராகவும் இருக்கும் சரீர சரீரி சம்பந்தமான தத்துவமே விஷிட்டாத்துவைதம் என்று சுருக்கமாகக் கூறலாம். இத்தத்துவம் சித் (உயிர்), அசித் (பிகிருதி, காலம்,சுத்தஸத்வம், தர்மபூதஞானம்), ஈச்வரன் (விஷ்ணு) எனும் தத்துவத் திரயங்களை தமது தத்துவத்தின் அடிப்படையாகக் கொண்டுள்ளது. மகாவிஷ்ணு தன்னைவிட்டு என்றும் நீங்காத பெரியபிராட்டியோடு வைகுந்தத்தில் நித்திய வாசம் செய்கின்றார். உயிர்கள் அனைத்தும் அவருக்கு கைங்கர்யம் செய்து அவரது நித்திய கல்யாண குணங்களில் திளைத்து நிற்பதே முடிந்த முடிவாகக் கொள்ளப்படுகிறது. அத்தகைய முதல்வன் பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை எனும் ஐந்து நிலைகளைக் கொள்கிறான்.

***01. பரத்துவம்***

பரம் என்கின்ற நிலை ஸ்ரீவைகுண்டம் எனும் பரம பதத்தில் லக்ஸ்மியுடன் வீற்றிருக்கும் நிலை. இந்நிலை மனத்தால் எண்ண முடியாதது. இந்நிலையில் உள்ள முதல்வனை முத்தர்களும், நித்திய சூரிகளும் சூழ்ந்திருப்பர். இதனை, ***'குழுமித் தேவர் குழாங்கள் கைதொழச் சோதி வெள்ளத்தினுள்ளே எழுவதோருரு'*** (திருவாய்மொழி

3-5-5) எனத் திருவாய்மொழி கூறுகிறது. அதாவது நித்தியரும், முத்தர்களும் கூட்டம் கூட்டமாய் வந்து அனுபவிக்க சோதிவெள் ளத்திடையே பிரகாசிக்கின்ற வடிவமாக பரத்துவம் காணப்படுகிறது. இந்நிலையில் விஸ்ணுவின் குனிந்த வலது திருவடியின் முளங்காலின் வலது கையும், தொங்கவிட்ட இடது திருவடியின் அருகில் தான் வீற்றிருக்கும் ஆதிசேஷன் உடலின் மேல் இடது கையை ஊன்றிக் கொண்டும், பக்தர்களின் துயரங்களைப் போக்குகின்ற சங்கு சக்கரங் களை பின்னிரு திருக்கரங்களால் தாங்கிக் கொண்டும் பிராட்டிமார் களுடன் கூடியிருக்கும் நிலை.

***02. வ்யூஹம்***

இந்நிலை ஈஸ்வரன் திருப்பாற்கடலில் பள்ளி கொண்ட நிலையாகும். திருப்பாற் கடல் ஸ்ரீவைகுண்டத்திற்கு கீழே, லீலாவிபூதியில் இந்தப் பிரபஞ்சத்திற்கு உள்ளேயும் இருக்கின்றது. இங்கே இருக்கும் ஈஸ்வர சொரூபத்தை சநகர் முதலிய மகாயோகிகள் வணங்குகின்றனர். வ்யூஹம் நான்கு உருவங்களில் இருக்கும். அவை வாஸுதேவன், சங்கர்ஷணன், ப்ரத்யும்நன், அநிருத்தன் என்பவையாகும். இவை முறையே படைத்தல், காத்தல், அழித்தல், ஆன்மீக உணர்வை வளர்த்தல் முதலிய தொழில்களைச் செய்கின்றது. இந் நான்கு உருவங்களிலே வாஸுதேவன் சிறப்பிடம் பெறுகின்றான். வாஸுதேவ உருவத்திலே ஞானம், பலம், ஐஸ்வர்யம், வீர்யம், சக்தி, தேஜஸ் ஆகிய ஆறு குணங்கள் வெளிப்படையாத் தெரியும்படியுள்ளன. வ்யூஹ உருவத்தில் ஞானமும், பலமும் வெளிப்படையாகத் தெரிய மீதி நான்கு குணங்களும் மறைந்து உள்ளன. ப்ரத்யும்நன் வடிவத்தில் ஐஸ்வரியமும், வீரியமும் வெளிப்படையாகத் தெரிய மீதி நான்கு குணங்களும் மறைந்திருக்கும். அநிருத்த வடிவத்தில் சக்தி, தேஜஸ் என்ற குணங்கள் வெளிப்படையாகத் தெரிய மீதி நான்கு குணங்களும் மறைந்திருக்கும்.

ஸங்கர்ஷணன் செய்யும் காரியங்கள் பிரபஞ்சத்தை அழித்தலும், சாத்திரங்களை நிலைநிறுத்தலுமாகும். இவர் ஜீவ தத்துவத்திற்கு ஆதாரமாக உள்ளார். ப்ரத்யும்நன் பிரபஞ்சத்தை படைத்தலையும், சாத்திரங்களை அனுசரித்து தர்மங்களை ஸ்தாபிக்கவும் செய்கின்றார். இவர் மனம் என்ற தத்துவத்திற்கு ஆதாரமாக உள்ளார். அநிருத்தன் பிரபஞ்சத்தைக் காப்பதையும் தர்மங்களையும் பரப்புவதையும் செய்கின்றார். இவர் அகங்காரம் எனும் தத்துவத்திற்க ஆதாரமாக உள்ளார். மேற்கூறிய நான்கு வ்யூஹ வடிவங்களை விட பன்னிரண்டு உப வ்யூஹ வடிவங்களையும் சாத்திரங்கள் கூறுகின்றன. வாஸுதேவ வ்யூஹத்தில் இருந்து கேசவ, நாராயண, மாதவ எனும் மூன்று உப

வ்யூஹங்களும் ஸங்கர்ஷ்ண வ்யூஹத்தில் இருந்து கோவிந்த, விஷ்ணு, மதுஸூதன எனும் மூன்று உப வ்யூஹங்களும் ப்ரத்யும்ந வ்யூஹத்தில் இருந்து திரி விக்ரம, வாமன, ஸ்ரீதர எனும் மூன்று உப வ்யூஹங்களும் அநிருத் வ்யூஹத்தில் இருந்து ஹ்ருஷிகேச, பத்மநாப, தாமோதர எனும் மூன்று உப வ்யூஹங்களும் தோன்றுகின்றன. வ்யூஹ வடிவங்கள் வெண்மை, செம்மை, மஞ்சள், கருமை எனும் நிறங்களை உடையது இந்நிறங்கள் யுகம்தோறும் ஒவ்வொரு வடிவத்துக்கும் மாறுபடும்.

***03. விபவம்***

இந்நிலையே அவதார நிலையாகும். முதல்வன் ஸாது, மக்களை ரட்சிக்கவும் தீயவர்களை அழிக்கவும், தர்மத்தை நிலை நாட்டவும் அவதாரம் செய்கின்றான். முதல்வன் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப தேவ வர்க்கத்திலோ, மனித வர்க்கத்திலோ, மிருக வர்க்கத்திலோ, தாவர வர்க்கத்திலோ தம்மை அவதாரமாக வெளிப்படுத்திக் கொள்வான்.

அவதாரங்கள் கணக்கில்லாதவை இருப்பினும் முக்கிய அவதாரங்களாக 39 கூறப்படுகின்றது. அவதாரங்ளை நேர் அவதாரங்கள் என்றும் ஆவேச அவதாரங்கள் என்றும் இரு வகையாக பிரித்துக் கூறுவர். நேர் அவதாரத்தில் ஈஸ்வரன் ஏதாவதொரு ஜீவனின் உருவத்தில் தோன்றி தனக்கு உகந்த செயல்களைச் செய்வான். ஆவேச அவதாரத்தில் ஏற்கனவே பிறந்திருக்கும் ஜீவனுடைய சரீரத்தில் அணுப்பிரவேசம் செய்து தனது காரியங்களைச் செய்கின்றான். அவதார நிலையில் ஈஸ்வரனது அவதார ரகசியங்களாக ஆறு கூறப்படுகின்றது. 1.ஈஸ்வரனுடைய அவதாரம் உண்மையானது 2.ஞானம் முதலிய குணங்களும், சுவாமித்வம் பிறவாமை, அழியாமை முதலிய பண்புகளும் சுரங்குவதோ அழிவதோ இல்லை. 3.இறைவனது திருமேனி சுத்த ஸத்வமானதாக இருக்கும். 4.முதல்வன் உயிர்களைப் போல கர்மங்களுக்கு கட்டுப்பட்டு பிறப்பதில்லை ஸங்கல்ப்ப மாத்திரையாலே தோன்றுவார். 5.அவருடைய தோற்றம் தர்மம் குலைந்து அதர்மம் தலைதூக்கும் போது ஏற்படும். 6. அவருடைய அவதாரம் பக்தர்களுக்கு நேரில் ஆறுதல் அளிக்கவும் அவருடைய விரோதிகளை அழிப்பதற்கும் தர்மஸ்தாபனத்திற்காகவும் எற்படுகின்றது.

**முப்பத்தியொன்பது அவதாரங்களிலும் பத்து அவதாரங்கள் மிக முக்கியமானவை.**

01. மீன் - களவு போன வேதங்களை மீட்பதற்காக மேற்கொள் ளப்பட்டது.
02. ஆமை - தேவர்களுக்கு அமிர்தத்தை அளிப்பதற்காக மேற்கொள்ளப் பட்டது.

03. பன்றி - சமுத்திரத்தில் அமிழ்த்தப்பட்ட பூமியை எடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டது.
04. நரசிம்மம் - தனது பக்தனான பிரகலாதனைக் காப்பதற்காக மேற்கோள்ளப்பட்டது.
05. வாமம் - தேவர்களிடம் இருந்து பறிக்கப்பட்ட சொர்க்கத்தை மீண்டும் அவர்களுக்கு அளிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டது.
06. பரசுராமர் - செருக்குற்ற அரசர்களைத் தண்டிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டது.
07. ஸ்ரீராமர் - தர்ம பரிபாலனத்திற்காகவும், சரணாகதி சாஸ்திரத்தை பிரபக்திக்காகவும் மேற்கொள்ளப்பட்டது.
08. பலராமர் - பகவத் சேவை செய்யும் விதத்தை காண்பிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டது.
09. ஸ்ரீகிருஸ்ணர் - தர்மத்தை நிலைநாட்டவும், ஆன்மீக விடயங்களை போதிக்கவும் மேற்கொள்ளப்பட்டது.
10. கல்கி - அதர்மத்தை அறவே அழித்து புது சகாப்தத்தை தோற்றுவிப்பதற்காக மேற்கொள்ளப்படவுள்ள அவதாரம்.

மேற்படி பத்து அவதாரங்களையும் ஆழ்வார்கள் நன்கு அனுபவித்துப் பாடியுள்ளனர். திருமங்கையாழ்வார் ***'மீனோடு ஆமை கேழல் அரி குறளாய் முன்னும் இராமனாய்த் தானாய் பின்னும் இராமனாய் தாமோதரனாய் கற்கியும் ஆனான்'*** (பெரியதிருவாய்மொழி) என்று அழகுறப் பாடியுள்ளார்.

***04. அந்தர்யாமி***

இதனை ஈஸ்வரனது தோற்றநிலை என்று கூறுவார். ஈச்வரன் எங்கும் வியாபித்துள்ள நிலை இதுவாகும். ஒவ்வொரு மனிதனது இருதயத்திலும் சூக்கும ரூபத்தில் தியானிக்வேண்டிய உருவமாகும். யோகிகளுக்கு தியானம் செய்தவருக்கு உதவும் விதத்தில் விக்கிரக வடிவத்தில் இருக்கும். உருவம் இல்லாத முதல்வனை உருவவடிவத்தில் தியானிப்பதற்காக அவரை இதயத்தில் கட்டை விரல் அளவு இருப்பதாக நினைத்து தியானிக்க வேண்டும். ஹ்ருதயப் பகுதியில் இவ்வடிவத்தை தியானிப்பதால் இவ் உருவத்திற்கு 'ஹார்தம்' எனும் பெயரும் உண்டு. யோகிகள் தங்கள் தியானத்தின்போது இவ் உருவத்தின் மேல் தங்கள் மனத்தை செலுத்துவதால் இதனை நண்பனாகவும் கருதுவர். அந்தர்யாமி வடிவம் உயிர்களின் இதயத்தை இடமாக கொண்டிருப்பினும் உயிர்களுக்கு ஏற்படும் சுக துக்கங்கள் ஈஸ்வரனுக்கு ஏற்படுவதில்லை. பிரபக்தி செய்பவர்களையும் பக்தி யோகம் பூர்த்தியாகச் செய்பவர்களையும் மரணமடைந்த பின் இவ் அந்தர்யாமி உருவம் அவர்களை

அனைத்துக் கொண்டு பரமபதம் அழைத்துச் செல்கின்றது. முதல்வன் உயிர்களோடு அந்தர்யாமியாக கலந்திருப்பது போன்று அறிவற்ற அசேதனப் பொருளாகிய உலகிடத்திலும் கலந்துள்ளான். அதாவது அசேதனப் பொருளில் உள்ளிருந்த அவற்றைத் தாங்கிக் கொண்டும், நியமித்துக் கொண்டும் தனக்காக உபயோகித்துக் கொண்டும் உள்ளான். இந்த அந்தர்யாமி வடிவத்தின் அடிப்படையிலே விசிட்டாத்து வைதம் சரீர சரீரி சம்மந்தத்தினைப் போதிக்கின்றது.

***05. அர்ச்சை***

முதல்வன் விக்கிரகங்களாக எழுந்தருளி அடியார்களுக்கு அருள் பாலிக்கும் நிலை. தனது பக்தர்கள் தேர்ந்தெடுத்த எந்தப் பதார்த்தத்திலும் (மரம், கல், உலோகம்) பிரகிருதிக்கு அப்பாற் பட்ட சுத்த ஸத்வமான தன்மையைச் செலுத்திப் பரம பதத்தில் இருந்து இவ்வுலகிற்கு இறங்கி வந்து நிற்பதனால் இந்நிலையை அர்சாவதாரம் என்றும் கூறுவர். விபாவதாரங்கள் ஈஸ்வரனுடைய சங்கர்ப்பத்தின் பேரில் நடக்கும். அர்ச்சாவதாரம் பக்தர்களின் விருப்பத்தின் பேரில் நடக்கும். அடியார்கள் எவ் உருவத்தில் ஈச்வரனைக் காண விரும்புகிறார்களோ அவ் உருவத்திலே அவதரிப்பார். அவர்கள் இட்ட திருநாமத்தை ஏற்றுக்கொள்வார். பக்தர்கள் விரும்புகின்றபடியெல்லாம் தனது குணங்கள் லீலைகள்முதலியவற்றைப் பிரகாசிக்கச் செய்வர். ஈஸ்வரனிடம் சமர்ப்பிக்க வேண்டிய எல்லாவற்றையும் இந்த ஈஸ்வரனிடமே சமர்ப்பிக்கலாம். அர்ச்சை உருவில் தன்னை அர்ச்சிக்கும் பக்தர்களுக்கு கட்டுப்பட்டு அவர்களது எல்லாவிதமான அபச்சாரங்களையும் மன்னிப்பவனாக உள்ளான்.

அர்ச்சை உருவம் நான்கு உருவில் உண்டு 1. தானாக தோன்றியது. உதாரணமாக ஸ்ரீ ரங்கத்தில் ரங்கநாதராகவும், திருப்பதியில் ஸ்ரீநிவாசராகவும் உள்ளார். 2.தேவர்களால் பிரதிஸ்டை செய்யப்பட்டவை உதாரணமாக காஞ்சிபுரத்தில் வரதராயராகவும், குருவாயூரில் கிருஸ்ணராகவும் உள்ள நிலை 3.ரிசிகளால் பிரதிஸ்டை செய்யப்பட்டவை உதாரணமாக திருவிண்ணகரத்தில் ஒப்பிலியப்பனாக உள்ள நிலை 4.மனிதர்களால் பிரதிஸ்டை செய்யப்பட்டவை.

ஆழ்வார்களால் மங்களசாசனம் செய்யப்பட்ட திருக்கோயில்கள் 108 ஆகும். அவற்றுள் 106 இப் பூமியிலே அமைந்து காணப்படுகின்றது. உடலோடு செல்ல முடியாத தேசங்களாக திவ்விய தேசமும், திருப்பா பற்கடலும் காணப்டுகின்றது. இவைதவிர அபிமான சேத்திரங்கள் எனக் கூறப்படும். திருநாராயணபுரம், பூரியெகந்நாதர் போன்ற ஆலயங்களில் உள்ள அர்சை மூர்த்திகளும் தனிச்சிறப்பானவை. இவ்

அர்ச்சாமூர்த்திகளுக்கு ஒரு துளசியையோ, பழத்தையோ சிறிது நீரையோ அளித்தால் அதனை ஏற்றுப்பெரும் பயனைத் தருகின்றார்.

ஈஸ்வரனது ஐந்து வடிவங்களையும் பிள்ளை லோகாசாரியார் தனது வசண பூசணத்தில் பின்வருமாறு கூறுகின்றார் பூமிக்கடியில் உள்ள நீர் போன்றது அந்தர்யாமி, பரத்துவம் என்பது உலகங்களைச் சூழ்ந்திருக்கும் நீர் போன்றது, பாற்கடல் போன்று இருப்பது வ்யூஹம். பெருக்காறு போன்றது விபவம் தேங்கிய மடுக்கள் போன்றது அர்ச்சை என்கிறார். அதாவது ஒருவர் கண்ணுக்கு புலப்படாத பகவானின் அந்தர்யாமி உருவம் பூமிக்கடியில் உள்ள நீர் போல மறைந்திருக்கும். உலகங்களிற்கு வெளியிலே பிரமாண்டத்தை சூழ்ந்திருக்கும் ஜலம் போன்றது பரத்துவம். விபவம் எப்பொழுதோ தோன்றி மறையும் வெள்ளம் போன்றது அதாவது அந்தந்த சமயங்களில் இருந்தவர்களால் காணமுடியம். அதன் பிறகு அதனால் பயனில்லை. வெள்ளம் தேங்கி நிற்கும் மடுக்களிலுள்ள நீர் எப்பொழுதும் பயன்படுவது போன்று அர்ச்சாவதார உருவம் எப்பொழுதும் எல்லோரும் பார்க்கும் படியாகவும் பயன் தருவதாகவும் இருக்கும் எல்லா பலன்களையும் தரவல்லது, மிகவும் அழகானது. இதனையே, ***'இச்சுவை தவிர நான் போய் இந்திர லோகமாளும் அச்சுவை பெறினும் வேண்டேன்'*** என்று தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச் செய்தார்.

மேற்படி ஈச்வரனது ஐந்து நிலைகளையும் விஷிட்டாத்வைத தத்துவம் நன்கு விளக்கியுள்ளது.

**துணைநூல்பட்டியல்:**


1. கோபாலதேசிகன்,V.N., ***வைணவம் ஒரு உரையாடல்,*** ஸ்ரீ விசிட்டாத்வைத ஆய்வு நிலையம், சென்னை. 2003.
2. நரசிம்ம ராகவாச்சாரி., ***கீதா பாசியம்,*** ஸ்ரீ நரசிம்மாசாரி ட்ரஸ்ட், சென்னை. 2000.
3. கிருஷ்ணசாமி ஐயர்., ***யதீந்திரதீபிகை,*** ஸ்ரீறங்கம் ஸ்ரீமதனதேவன் ஆச்சிரமம், சென்னை. 2003.
4. Srinivasachary,P.N., Philosophy of Vaishtadvaita, Adyar library publications, Chennai. 1999.
5. Chary.,S.M.S., Vaishnavism, Motital Banarasidass, Delki.
6. Sampathkumaran.M.R., Gita Bhashya of Sri Ramanuja, Sampathkumaran trust, Chennai. 2014.


☼ ☼ ☼

# சிவப்பிரகாசம் சார்பு நூல்

சக்திவேல் மனோரஞ்ஜனி
உதவி விரிவுரையாளர்

நூல்களை முதல்நூல், வழிநூல், சார்பு நூல் என்று மூன்றாகக் கூறுவர். இதில் முதல் நூல் என்பது வினையில் நீங்கிய முதல்வனால் செய்யப்பட்டது. அந்தவகையில் சிவபெருமானால் செய்யப்பட்ட வேதங்களும் சிவாகமங்களுமே முதல் நூலாகும். இதனையே தொல்காப்பியம் 'வினையில் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்டது முதநூலாகும்' என்று கூறுகிறது. இந்நிலையில் நோக்கும்போது சாத்திர நூல்கள் அனைத்தும் வழிநூல் என்றேகூறவேண்டும்.

அடுத்து முதல்வன் அருள்வழி நின்று செய்யும் அருளாளர் நூல்களையும் முதல்நூல் என்று கூறலாம் என்று சான்றோர் கூறுவர். இவ்விரண்டாம் முறையிலே திருமுறைகள், மெய்கண்ட சாத்திரங்களை முதல்நூல் என்று கூறப்படுகிறது. அந்தவகையில் அருள்வழி நின்று மெய்கண்டரால் செய்த சிவஞானபோதம் முதநூலாம்.

வழிநூல் என்பது முதல்நூலில் இருந்து மாறுபடாது பிற்காலத்துக்கு ஏற்றவகையில் ஒருசில மாற்றங்களைச் செய்து வருவது. இதனை 'முன்னோர் நூலின் முடிபொருங்கொத்துப் பின்னோர் வேண்டும் விகற்பம் தருவது' என்று கூறப்படுகிறது. அதாவது முதல் நூலின் கருத்தில் மாறுபாடு இல்லாது கட்டமைப்பில் மாற்றங்கள் செய்வது. அதாவது பொருள் வைப்பு முறையில் இடமாற்றம் செய்வது. அந்தவகையில் சிவஞானபோதத்திற்கு சிவஞானசித்தியார் வழிநூலாம்.

சார்பு நூல் என்பது முதல் வழிநூல்களில் இருந்து பெரிதும் வேறுபாடு உடையது என்று நன்னூல் கூறுகிறது. அந்தவகையில் சிவப்பிரகாசம் சித்தாந்தக் கட்டமைப்பில் இருந்து சிறிதும் மாறுபாடு இல்லாதது. ஆனால் பொருள் வைப்பு முறையில் மாறுபாடுடையது. மேற்படி நன்னூல் வரைவிலக்கணப்படி சிவப்பிரகாசம் வழிநூல் என்றே கூறவேண்டும். ஆனால் சிவப்பிரகாசம் வேறுவகையில் சார்புநூலே.

சார்பு நூல் பற்றி தொல்காப்பியத்தில் சொல்லப்படவில்லை அதனால் அதற்கு அங்கு இலக்கணச் சூத்திரம் இல்லை. ஆனால் அதற்கு பிறகு இயற்றப்பட்ட இலக்கண நூலான நன்னூல் பொதுபாயிரத்தில்,

**"இருவர் நூற்கும் ஒரு சிறை தொடங்கித்**

**திரிபுவேறு உடையது புடை நூலாகும்"**

என்ற சூத்திரம் காணப்படுகின்றது. சார்பு நூல் பற்றி பலரும் பல கருத்து முரண்பாடுகளை கொண்டு காணப்படுகின்ற நிலையில் இறையனார் சார்பு நூல் பற்றி அகப்பொருள் உரையில் கூறும் விளக்கம் ஓரளவிற்கு தெளிவளிப்பதாக உள்ளது.

"அவ்விரு நூலுள்ளும் ஒரு வழி முடிந்த பொருளை ஓர் உபகாரம் நோக்கி ஒரு கோவைப்பட வைப்பது சார்பு நூல்" என்பது அந்நூலில் அவர் தரும் விளக்கம். அதாவது சார்பு நூலில் பொருள் ஒத்திருக்கும் ஆனால் வைப்பு முறை வேறுபட்டிருக்கும் என்று எழுதப்பட்டுள்ளது. பொருளை ஓர் உபகாரம் நோக்கி ஒரு கோவைப்பட வைப்பது என கூறியிருப்பது தனிதன்மையுடையது ஆகும். அவ்வகையில் மெய்கண்டசாஸ்திரங்களில் சிவஞானபோதம் முதல் நூலெனவும், சிவஞானசித்தியார் வழிநூலெனவும் சிவப்பிரகாசம் சார்பு நூல் எனவும் பொதுவாக அறிஞர்கள் கூறி நிற்பார்கள்.

சிவப்பிரகாச நூலுக்கு உரை செய்த மதுரைச்சிவப்பிரகாசர் என்பவர் சிவஞானபோதம், சிவஞானசித்தியார் என்னும் இரண்டையுமே வழிநூல் என்றும் சிவப்பிரகாசம் சார்புநூல் என்றும் கூறினார். இதனை அவர்

"அந்த மெய்கண்ட தேவ தம்பிரானார்.... பன்னிரண்டு சூத்திரமாக வகுத்து.... சிவஞானபோதம் எனத் திருநாமத்தையும் சாத்தி வழி நூலாகச் செய்தருளித் தமது திருவடியைப் பெற்ற அருள் நந்தி தேவ தம்பிரானார்க்குக் காட்சித்தருள, அவர் அந்நூலின் அர்த்தத்தை விரித்துச் சிவஞானசித்தி என்னும் திருநாமத்தையும் சாத்தி வழிநூலாகச் செய்தருள இந்த இரண்டு நூல்களையும் கொற்றவன் குடியில் உமாபதி தேவ தம்பிரானார் திருவுள்ளத்தடைத்தருளி .... யாவருக்கும் எளிதாக அடையத் தக்கதாக அந்த இரண்டுவழி நூல்களின் அந்தமும் முன்னூலாகிய சிவாகமத்தின் அந்தமும் தம்மிடத்தில் விளைவதாய் இருக்கப்பட்ட திருவருள் ஞானமும் கூட்டி ... சிவப்பிரகாசம் என்னும் திருநாமத்தையும் சாத்திச் சார்பு நூலாகச் செய்தது என அறிக..." எனவும்

"இங்ஙனம் சிவாகமம் முன்னூல் என்பதற்கும் சிவஞானபோதமும் சிவஞானசித்தியும் வழிநூல் என்பதற்கும் இந்தச் சிவப்பிரகாசம் சார்புநூல் என்பதற்கும் பிரமாணமாவது.....

'வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்டது முதல் நூலாகும்' - என்னும் விதியால் சிவாகமம் முன்னூலானது என அறிக.

இரண்டாவது – முன்னோர் நூலின் முடிவு ஒருங்கு ஒத்துப் பின்னோன் வேண்டும் விகற்பம் கூறி அழியா மரபினது வழிநூலாகும் - என்னும் விதியால் சிவஞானபோதம் சிவஞான சித்தியும் வழி நூலானது என அறிக.

மூன்றாவது இருவர் நூற்கும் ஒரு சிறை தொடங்கித் திரிபு வேறு உடையது புடைநூலாகும் - என்னும் விதியால் முன்னூலாகிய சிவஞானபோதமும்

சிவஞானசித்தியின் அர்த்தமும் கருத்திலுறை திருவருளாகிய வேற்றுமை அர்த்தமும் கூட்டி அருளிச் செய்கையால் இந்தச் சிவப்பிரகாசம் சார்பு நூலானது என அறிக..... எனவும்,

இந்தச் சார்பு நூலாகிய சிவப்பிரகாசம் என்னும் நூலிலே முன்னூலின் அந்தமும் வழிநூலின் அந்தமும் அது நீங்கலாக வேற்மை அத்தமும் கூட்டி அருளிச் செய்தற்குப் பிரமாணம் இந்நூலிலே தெரிந்த குரு முதல்வர் என்ற செய்யுளிலே இறைவன் நூலும் கலந்து – என்றமையால் முன்னூலின் அத்தமும் கூடினது என அறிக. விளம்பிய நூல் அவை இரண்டும் விரும்பி நோக்கி என்றமையால் வழி நூலின் அத்தமும் கூடினது என அறிக. கருத்திலுரை திருவருளும் - என்றமையால் திரிபு வேறுடைய வேற்றுமை அத்தமும் கூடினது என அறிக. ஆக மூன்றுவகையும் இங்ஙனம் கண்டு கொள்க.

இவ்வாறு சிவப்பிரகாசம் சார்பு நூல் என்பதற்கு தனது காப்புச் செய்யுள் உரையில் மிக விரிவாக குறிப்பிட்டுள்ளார். மேலும் இக்கருத்துக்கு வலுவூட்டும் முகமாக தெரிந்த குருமுதல்வர் என்னும் பாடலை அகச்சான்றாகக் காட்டியவர் புறச்சான்றாக ஞான தீக்கைத் திருவிருத்தம் என்னும் நூலிருந்து ஒருபாடலையும் உதாரணமாக குறிப்பிட்டுள்ளார்.

"தேசுமிகும் அருள்பயின்ற சிவப்பிரகாசத்தில்

திரிந்து பொதுச் சங்கற்ப நிராகரணந் திருத்தி

ஆசிலருள் வினாவெண்பாச் சார்பு நூலால்

அருள் எளிதில்குறி கூட அளித்து ஞானப்பூசை தக்க காரணம் முன்புகன்று அதனில் புரிந்து

புணர்விக்கச் சிவஞான போதசித்தி வழிநூல்

மாசில் சதமணிக்கோவை முன்னூல் சான்று

மருவு திருமுறைத் திரட்டு வைத்தனன்

மன் உயிர்க்கே"

அவர் தம் உரையில் மற்றோரிடத்தில் சிவப்பிரகாசம் சார்பு நூல் என்பதற்கு பின்வருமாறு காரணம் எழுதியிருக்கின்றார். "தத்துவங்கள் தோன்றுமிடத்துச் சித்தியாரில் காலம் முதலாகத் தோன்றும் என்று சொல்லியிருக்க இந்நூலில் கலை முதலாகத் தோற்றம் சொன்னது ஏதெனில் சித்தியார் செய்தருளினவர் பிரபஞ்சத் தோற்றம் சொல்லுகையால் காலம் உண்டாகவே பிரபஞ்சம் தோன்றுகையாலே காலம் முதலாச் சொன்னதென அறிக. இந்நூல் செய்தருளி னவர் ஆன்மாக்களுக்கு உணர்த்தும் முறைமையைச் சொல்லுகையாலே உணர்த்துகைக்குக் கலை முந்தி எழுப்ப வேண்டுகையால் கலையை முந்திக்

கூறியதென அறிக. அப்படி வேற்றுமை கூறியது ஏதென்னில் இது சார்பு நூலாகையால்….. என அறிக"

சிவஞானசித்தியாரில் எட்டாம் சூத்திரம் முதல் அதிகரணத்தில் பத்துத் திருவிருத்தங்களில் சொல்லப்பட்ட தீக்கை முறையினை உமாபதி சிவம் பாயிரத்தில் சுருக்கமாக மூன்று திருவிருத்தங்களில் கூறிவைத்தார். இவ்வாறு இவர் தீக்கை பற்றி பாயிரத்தில் கூறியதற்குக் காரணம் தீக்கையுடையோரே ஞானநூலை ஓதுதற்குத் தகுதியுடையர் என்பதனை வலியுறுத்தவே எனலாம். அதன் வழிநூலாகிய சித்தியாரிலும் இக்காரணத்தினாலேயே இது விரித்துரைக்கப்பட்டது எனலாம்.

முதல் நூலும் வழி நூலும் முதலில் பொருளுண்மையினை அளவையினால் நிறுவிக் கொண்டு பின்னர் இலக்கணம் கூறுகின்றன. ஆனால் சிவப்பிரகாசத்தில் இலக்கணம் 13ம் பாடலில் பதி இலக்கணம் கூறிப் பின்னர் 16ம் பாடலில் பதி உண்மையினை நிறுவுகின்றார். இவ்வாறே ஆணவமலத்துக்கு இலக்கணத்தை 20ம் பாடலில் கூறி பின்னர் நெடுந்தூரம் சென்று 34ம், 35ம், 36ம் பாடல்களில் அதன் உண்மையினை நிறுவுகின்றார்.

பொது அதிகாரத்தில் 19ம் பாடலில் கூறிய ஆன்மாவின் இலக்கணத்தைத் தொடர்ந்து உண்மையதிகாரத்தில் ஆன்மா என்பதொன்றில்லை என்றும் ஐம்பொறி முதலியனவே ஆன்மா என்றும் கூறுபவர்களை மறுத்துக் கூறினார். உடம்பின் வேறாய் உடம்பினுள்

தத்துவங்களின் வரிசையில் குணதத்துவத்தையும் புத்தி தத்துவத்தையும் இவர் சற்று விரித்துக் கூறிப் புத்தி குணபாவகங்களுக்குத் தொகை கூறியுள்ளார். அதாவது வழிநூலில் மூலப்பிரகிருதி கலையில் தோன்றிக் குணவடிவாய் வரும் என்றும் அக்குணம் சாத்துவிகம் முதலிய மூன்றாக இருக்கும் என்றும் பின்னும் அவற்றுள் ஒவ்வொன்றும் முத்திறப்பட்டு ஒன்பது வகையாகும் என்றும் அதன் கண் தோன்றும் புத்தி முதலிய தத்துவங்களும் குணவடிவேயாய்ப் போகசாதனமாய் ஆன்மாவைப் பந்திக்கும் என்றும் சொல்லப்பட்டது.

இதனை விரிவாக சிவப்பிரகாசம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது,

சாத்துவிகம் - பிரகாசமும் லகுதையும் உடையதாக இருக்கும்

இராசதம் - வியாவிருதியும் அடர்ச்சியும் உடையதாக இருக்கும்

தாமதம் - கௌரவமும் அநியமும் உடையதாக இருக்கும் என விரித்துக் கூறுகின்றது. மற்றும்

தாமத குணம் - இந்திரிய விடயங்களைக் கைக் கொள்ளும்.

இராசத குணம் - ஆன்மா போகம் கொள்வதற்கு இடமாக இருக்கும்.

சாத்துவிக குணம் - ஒழியாப் பிரகாசமாய் இருக்கும்.

புத்தி தத்துவம் - ஐம்பது பாவங்களைப் பண்ணும்.

என்று இங்கு விரித்துரைக்கப்படும் விடயங்கள் வழிநூலில் விரித்துரைக்கப்படவில்லை.

வழி நூலில் எட்டாம் சூத்திரத்தில் சொன்ன முத்திபேதங்களை உமாபதிசிவம் பொதுவதிகாரத்தின் இறுதியில் வைத்தார்.

அவத்தை கூறுமிடத்தில் முதல் நூலைப்பின்பற்றி அதீதம் முதலாகக் சூறினார். ஆனால் வழிநூலில் சாக்கிரம் முதலாகக் கூறப்படுகின்றது.

முதல் நூலில் தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த என்று கூறப்பட்டது. வழிநூலில் மன்னும் அருட் குருவாகி வந்து என்று கூறப்பட்டது. சிவப்பிரகாசத்தில் முன்னம் ஈட்டிய தவத்தினாலே இறை யருள் உருவாய் வந்து என முதல் நூல் வழிநூல் இரண்டையும் பின்பற்றி இணைத்துக் கூறினார்.

திருவைந்தெழுத்துப்பற்றி முதல்நூலும் வழிநூலும் எடுத்துக் கூறவில்லை விதி எண்ணும் ஐந்தெழுத்தே என முதல் நூலும் ஓசை தரும் ஐந்தெழுத்தை விதிப்படி உச்சரிக்க என வழிநூலும் கூறப்பட்டுள்ளது.

ஆனால் சிவப்பிரகாசத்தில் ஐந்தெழுத்து, ஐந்தெழுத்தின் பொருள் நிலை, ஐந்தெழுத்தின் யகரத்துக்கு நகர மகரங்களின் சம்பந்தம் அதன் விளைவு, ஓதும் முறை முதலியவற்றை விரிவாக விளக்கிக் கூறியுள்ளார்.

இவ்வகையில் சிவப்பிரகாசம் சார்பு நூல் என்பதற்கான காரணங்களாக பின்வருவன அமைகின்றன. நூலமைப்பு முறை, பொருட்பாகுபாட்டு முறை, பொருட்களை இடம் மாற்றிக் கூறும் முறை, முதல் வழி நூல்களை இணைத்துக் கூறும் முறை, வழி நூல் விரிக்காது விட்டவற்றை விரித்துக் கூறும் முறை போன்றவற்றை குறிப்பிட முடியும்.

☼ ☼ ☼

யுகங்கள் தோறும் அவதாரங்கள்

உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலு நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணாங்களே

மு.சிவநேசன்

நல்லவரை காக்க யுகங்கள் தோறும் பகவான் அவதாரம் எடுத்து தனது காத்தல் தொழிலை மேற்கொண்டு தீமைகளை தீயவர்களை அறம் தவறியவர்களை அழித்து அருள் பாலிக்கின்றார்.

யுகங்கள் நான்கும் முறையே கிருதயுகம், திரேதாயுகம், துவாபர யுகம், கலியுகம் என்று வகுக்கப்பட்டுள்ளன.

கிருத யுகத்தில் வாழ்பவர்கள் கொடுத்து வைத்தவர்கள் என்றே கூற வேண்டும். இந்த யுகம் பதினேழு இலட்சத்து இருபத்தெட்டு ஆயிரம் ஆண்டுகள் நிலைக்கிறது. கிருத யுகத்தில் வாழ்பவர்கள் அனைவருமே நல்லவர்கள் அறநெறியில் வாழ்பவர்கள் என்றுதான் கூறவேண்டும். கள்வரும் இல்லை எனவே காவலும் இல்லை. பிச்சை கொள்வாரும் இல்லை எனவே கொடுப்பாரும் இல்லை.

நிம்மதியாக வாழும் இந்த யுகத்தில் மனிதனின் சராசரி ஆயுள் 840 வருடங்கள். உயரமோ ஐந்து அடி.

திரேதா யுகத்தில் பகவானின் ஏழாவது அவதாரமான இராமாவதாரம் நிகழ்ந்து இருக்கிறது. இந்த யுகத்தில் முக்கால் பங்கு நல்லவர்கள் அறநெறி தவறாது வாழ்பவர்கள். காற் பங்கினர் அறநெறி தவறி வாழ்பவர்கள். திரேதா யுகம் பன்னிரண்டு இலட்சத்து தொண்ணூற்றி ஆறு ஆண்டுகள் நிலைக்கிறது. அறம் குறைவதால் அதே விகிதமாக மனிதனின் ஆயுளும் 616 ஆண்டுகளாக குறைகிறது. தசரதன் ஆட்சியில் இராமாவதாரம் நிகழும் அயோத்தி புண்ணிய பூமியில் அனைவருமே அறநெறி தவறாது வாழ்பவர்கள் குவிந்து விட்டனர்.

அடுத்து வரும் துவாபர யுகம் கிருஷ்ணாவதாரம் பாரதப் போர் இடம் பெற்ற காலம் ஆகிறது. இது எட்டு இலட்சத்து அறுபத்தி நான்காயிரம் ஆண்டுகளை கொண்டது. இந்த யுகத்தில் வாழும் மாந்தரில் அரைவாசிப் பேர் அறநெறி தவறாது வாழ்பவர்கள். ஏனையோர் அறநெறி தவறியவர்களே. அதற்கேற்ப மனிதனின் ஆயுளும் முன்னூறு வருடங்களாக குறைகிறது. உயரமோ ஆறடியை எட்டுகிறது.

தற்போது நான்காவது யுகமாகிய கலியுகம் நடைபெறுகிறது. நான்கு இலட்சத்து முப்பத்தி இரண்டாயிரம் கொண்ட கலியுகத்தில் சுமார் ஐயாயிரம் ஆண்டுகள் முடிவடைந்து விட்டதாக கருதப் படுகிறது. கலியுகத்தில் முக்கால் பங்கு அறம் தவறியவர்கள் கால் பங்கு அறவழியில் வாழ்பவர்கள் என்று விதிக்கப்பட்டு இருக்கிறது. கலியுகத்தில் மனிதன் ஆயுள் நூற்றி இருபது ஆண்டுகள் என்றும் கூறப் பட்டுள்ளது.

கலியுகத்தின் இறுதியில் கல்கி அவதாரம் நிகழும்வரை உலகத்தில் கொடுமைகள் மலியவே செய்யும். அதற்கு மேலும் நான்கு இலட்சம் ஆண்டுகளுக்கு மேலாக காத்திருக்க வேண்டிய நிலமை இருக்கலாம்.

பலர் இந்த யுக வரலாறுகளை ஏற்பதில்லை. சில நாட்கள் வாழ்க்கையில் நிலைக்கும் எறும்பிடம் போய் ஆண்டு நூற்றாண்டு என்றெல்லாம் இருக்கிறது என்று சொன்னால் நம்பவா போகிறது?

யுகங்களோடு கால அளவுகள் முடிவடைவதில்லை. அப்பால் மகாயுகம் (4 யுகங்கள்) மன்வந்திரம் (12 மகாயுகங்கள்) கல்பம் (14 மன்வந்திரங்கள்) என நீளும் காலத்தில் முப்பது கல்பங்கள் பெயரிடப்பட்டுள்ளன.

தற்போது இரண்டாவது கல்பமாகிய ஸ்வேத வராக கல்ப காலமாகும். எனவே இன்னும் பல பில்லியன் ஆண்டுகள் பிரபஞ்சம் நிலைபெறப் போகிறது. ஆன்மா மாறி மாறி பிறப்பு எடுத்துக் கொண்டே இருக்கும்.

திரேதா யுகத்தில் நிகழ்ந்த இராமாவதார அற்புதம் பற்றி அடுத்து வரும் சக்கரம் இதழ்களில் தொடர்வோம். இராமாயண காலம் பற்றி கணிக்கப் போனால் கலியுகத்தில் ஐயாயிரம் ஆண்டுகள் முடிவடைந்து விட்டன. இடையில் துவாபர யுகம் எட்டு இலட்சத்து அறுபத்தி நான்காயிரம் ஆண்டுகளை கடந்து இருக்கிறது. அதற்கு முந்தைய திரேதா யுகமே இராமாயண காலம் எனலாம்.

அடுத்த சக்கரத்தில் இராமாயணம் பற்றி பேசும் வரை அனைவருக்கும் பகவானின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டும் என்று வணங்கி வாழ்த்தும்

**(கம்பன்கடலமுதம் பாற்கடல் நூலினை ஆச்சிரமத்தில் பெற்றுக் கொள்ள முடியும்)**

# ஆரோக்கிய வாழ்வில் ஒருங்கிசைவினை ஏற்படுத்தி மனித மேம்பாட்டிற்கு வித்திடும் யோகக்கலை.

*ஶ்ரீ. நதிபரன்*

இந்தியப் பெருங்கலைகளுள் பழம்பெரும் கலையாக போற்றப்படும் யோகக்கலையானது தற்போது உலகெங்கும் பிரசித்தம் பெற்றுவருகின்ற கலையாக நோக்கப்படுகிறது. நவீனத்துவம் எனும் பீடிகையுடன் பழமையை புறமொதுக்கி புதுமைக்கும் மாற்றங்களுக்கும் முக்கியத்துவமளிக்கப்பட்டு வருகின்ற தற்காலத்தில் பழமை குன்றாது நோய் குணப்படுத்தும் தன்மையில் காத்திரமான இடத்தினை இக்கலை பெற்று வருகின்றது. நவீன மருத்துவத்துறையை விஞ்சுமளவிற்கு உடல், உள ரீதியான குணமாக்க கடினமான அல்லது சவால் நிறைந்த பல்வேறு நோய்களை பக்கவிளைவுகளின்றி குணப்படுத்தியிருப்பது கண்டறியப்பட்டிருப்பதனால் தேசம் கடந்து மேலை நாட்டவர்களும் கூட இக்கலையால் ஈர்க்கப்பட்டு ஆர்வத்துடன் பயின்றொழுகிவருகின்றமை கண்கூடு. காலத்தின் அசைவுகள் மனிதனது எண்ணங்களிலும் சிந்தனைகளிலும் நடத்தைகளிலும் பிரதிபலித்து வருகின்றன. மனித வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்படுவது தவிர்க்கப்பட முடியாதவை. இருந்தபோதும் மாற்றங்கள் எனும் பெயரில் மனித வாழ்வியல் விழுமியங்களை கருவறுக்கும் செயற்பாடுகள் முனைப்புக் கொள்வதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அவ்வாறு முனைப்புக் கொண்டால் உடல், உள, சமூக, சூழல், ஆன்மிக ரீதியான பல்வேறு எதிர்மறையான விளைவுகளையும் அறுவடை செய்ய வேண்டும் என்ற நிதர்சனமும் உணர்தற்குரியது. இத்தகைய பின்னணியில் தான் தற்காலத்தில் அதிகரித்துவருகின்ற நோய்த்தாக்கங்களானவை மக்களின் நாளாந்த வாழ்வியல் நகர்வுகளை பாதித்து ஆயுளையும் சுருக்கி வருவதனை காணமுடிகின்றது. எவ்வளவுதான் மருத்துவ விஞ்ஞானம் நாளுக்குநாள் முன்னேற்றம் கண்டு நோய்த்தாக்கங்களுக்கு பரிகாரம் தேடி நிவர்த்திக்க முற்பட்டாலும் அவை புதுப்புது வடிவில் சன்னதம் கொண்டு மனிதனை தாக்குகின்றனவேயொழிய அவற்றின் தாக்கம் குறைந்தபாடாக தெரியவில்லை. இதற்கு நமது வாழ்வியற் கட்டமைப்பில் ஏற்பட்ட சிதைவினை பிரதானத்துவப்படுத்திக் கூறலாம். இந்நிலையில், ஒருவன் எப்படியும் வாழலாம் என்று தான்தோன்றித்தனமாக வாழாமல் இப்படித்தான் வாழவேண்டும் என்று கோடு போட்டு வாழும் விதத்தை நமக்குச் சொல்லித் தரும் கலையாக திகழ்கின்றது. இ.்.து இந்துத்துவம் சார் பின்னணியை கொண்டெழுந்தாலும் அதன் அடிப்படைக்கொள்கைகளானவை பெரும்பாலும்

மதச்சார்பின்றி, மனித வாழ்வியலின் ஆழ்ந்த தத்துவ உட்பொருட்களை உள்ளடக்கியுள்ளமையை நவீன விஞ்ஞானமே வியப்புடன் ஏற்றுக்கொள்கின்றது. இக்கலையானது பொதுவாக ஆரோக்கியத்தை மேம்படுத்துவதிலிருந்து உடல், உள கட்டமைப்பை சீராக பேணுதல் வரை எவ்வாறான வகிபங்கினை கொண்டுள்ளதென்பதனை சுருக்கமாக நோக்கலாம்.

ஆரோக்கியம் என்ற எண்ணக்கரு பல் பரிமாணமுடையதாக விளங்குகிறது. உலக சுகாதார நிறுவனம் என்ற சர்வதேச அமைப்பு, "ஆரோக்கியம்" என்பதற்கு உடல், உளம், சமூகம், சூழல், ஆன்மிகம் ஆகிய நிலைகளில் நன்நிலையை அடைதல் என வரைவிலக்கணப்படுத்துகிறது. இவ் ஐந்து நிலைகளும் ஒன்றுக்கொன்று பரஸ்பர தொடர்புடைய அகச்சார்புடையவையாகும். ஒன்றில் ஏற்படும் பாதிப்பானது ஏனையவற்றிலும் தாக்கம் செலுத்தும் தன்மையவை. இவற்றிற்கிடையே ஒருமைத்தன்மையான - கூட்டிணைந்ததான அணுகுமுறையை (Holistic Approach) ஏற்படுத்தினாலேயே மனித வாழ்வு பூரணத்துவமுடையதாக விளங்கும். இதற்கான உன்னதமான கருவியாக யோகம் நோக்கப்படுகிறது. பொதுவாக யோகமானது ஆழ்ந்தகன்ற பொருட்தத்துவத்தை எமக்கு வெளிப்படுத்தி நிற்கிறது. **"யுஜ்"** எனும் வினையடியினின்று பிறந்த இச்சொற்பதம் குறித்துநிற்கும் பொருளை நோக்கின், 'இணைத்தல்' அல்லது 'ஒன்றுசேர்த்தல்' என்ற நேரடி அர்த்தம் கொண்டு, நமது உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்று முக்கிய பொருட்களின் இயக்கப்பாடுகளையும் ஒன்றிணைத்து மனித வாழ்வியற் சமன்பாட்டிற்கு வித்திடும் அறிவியற்கலையாக விளங்குகிறது. இதனை இன்னொருவிதமாகக் கூறும் போது ஜீவாத்மா, பரமாத்மாவுடன் இணைதலுக்கான ஒழுக்கநெறிகளை- வாழ்வியல் ரீதியான விடயங்களை போதிக்கும் துறை இதுவாகும். இந்து தத்துவ நூல்களெல்லாம் ஆன்மா நிறை நிலையுற்று முக்திப் பேறடைவதையே குறிக்கோளாக கொண்டிலங்குகின்றன. அதற்கான வழியாக யோகத்தையே சுட்டியுரைக்கின்றன. யோக நிலைகளை அடைவதற்கு உடல், உள ஆரோக்கியம் என்பது முக்கியமாக கொள்ளப்படுகின்றன. இதன்படி பார்க்கும்போது ஆரோக்கியம் என்ற எண்ணக்கருவில் உள்ளடக்கப்பட்டுள்ள இவ் ஐந்து நிலைகளின் இயக்கங்களை ஒன்றிணைத்து அவற்றிற்கிடையே ஒரு பொதுமைத்தன்மையை காணுகின்ற புனிதமானதொரு கலையாக கட்டமைக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். மனிதனின் உடல், உளக் கட்டமைப்பை கூர்ந்து நோக்கின் அவை பல சிக்கலான பொறிமுறைகளை கொண்டுள்ளன என்பது புலனாகும். அவற்றினை மிக ஆழமாக அறிந்து கொள்ள முற்படுவது நம் சிற்றறிவின் பாற்பட்டதாகும்.

எமது உடலானது அமைப்பு ரீதியாக ஒன்பது மண்டலங்களாக-தொகுதிகளாக (Systems) பிரிக்கப்படுகின்ற அதேவேளை, தொழிற்பாட்டு ரீதியிலும் இவை ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று இடைத்தொடர்புள்ளவையாகவும் காணப்படுகின்றன. அவை, இரத்த ஓட்ட மண்டலம் (Circulatory System), சமிபாட்டு மண்டலம் (Digestive System), இனப்பெருக்க மண்டலம் (Reproductive System), அகஞ்சுரக்கும் மண்டலம் (Endocrine System), சுவாச மண்டலம் (Respiratory System), நிணநீர் மண்டலம் (Lymphatic System), கழிவகற்றும் மண்டலம் (Excretory System), நரம்பு மண்டலம் (Nervous System) மற்றும் எலும்புதசை மண்டலம் (Musculoskeletal System) என ஒன்பது பகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளது. அத்துடன் உடலில் முக்கியமாக ஐந்து உறுப்புக்கள் காத்திரத்தன்மை பொருந்தியவையாக விளங்குகின்றன. மூளை, இதயம், கல்லீரல், நுரையீரல்கள் மற்றும் சிறுநீரகங்கள் என்பவையே அவையாகும். ஏனையவை துணை உறுப்புகளாக அமைகின்றன. உடலியற்செயற்பாடானது சங்கிலித்தொடர் போன்றது. ஒரு மண்டலத்திலோ அல்லது ஏதேனும் உறுப்பு ஒன்றிலோ ஏற்படும் பாதிப்பு ஏனையவற்றிலும் தாக்கத்தை ஏற்படுத்த வல்லவையாகும். இன்றைய காலகட்டத்தில் வேகமெடுத்துவருகின்ற பல்வேறு தொற்றா நோய்களிற்கு, தவறான உணவுப்பழக்கங்கள், இயற்கைக்கு முரணான வாழ்வியல் நடவடிக்கைகள், உடலுழைப்பின்மை, ஓய்வின்மை, தீய பழக்கங்கள் முதலியவை முகாந்திரங்களாக அமைவதுடன் ஆரோக்கியத்திற்கும் வேட்டு வைக்கின்றன. ஆசனப்பயிற்சிகள் மூலம் உடலின் தொடர்புடைய பகுதிகளுக்கு அதிகமான இரத்தோட்டம் மற்றும் தேவையானளவு பிராணசக்தியும் கிடைப்பதனால் அனுசேபத்தொழிற்பாடுகள் (Metabolism) சிறப்பான முறையில் நடைபெறுகின்றன. எனவே உடலிலுள்ள மிகச்சிறிய அலகாகிய கலங்களிலிருந்து இழையங்கள், அங்கங்கள் மற்றும் தொகுதிகள் வரையான எல்லா அமைப்பு ரீதியிலான குறைகளையெல்லாம் சீர்செய்து அவற்றின் ஒழுங்கான - வினைத்திறனான இயக்கப்பாட்டினை உறுதிப்படுத்த வல்ல நித்திய சிரஞ்சீவியாக இக்கலை மிளிர்கிறது.

தற்காலத்தில் சமூகத்தின் மத்தியில் உளத் தாக்கங்கள் அதிகரித்துவருகின்றமை பற்றி இன்று பலராலும் பிரஸ்தாபிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக உள நெருக்கீடுகள் (Stress), மன அழுத்தம் (Depression), பதகளிப்பு (Anxiety) என்பவற்றால் பாதிக்கப்படுவோர் தொகை சடுதியாக அதிகரித்து வருகின்றமை நோக்கத்தக்கது. இதற்கான முதன்மைக் காரணம், நமது வாழ்வியல் கோலங்களில் ஏற்பட்ட மாற்றங்களேயாம். உளப்பாதிப்புக்களானவை பல்வேறு மாற்றற்கடினமான பாரிய உள நோய்களையும் (**Mental:** Psychosis, Schizophrenia, Bipolar Disorder, Dementia, Trauma, Phobias, Obsessive Compulsive Disorder, Panic) உடலியற்பாதிப்புகளையும் (**Physical:** Arthritis, Asthma, Cancer, Diabetes, Heart diseases, fatigue, pains, headache, digestive problems, loss of energy, changes in appetite, weight loss or gain) ஏற்படுத்துவதுடன்

ஆயுளையும் சுருக்கி விடுகின்றன. மேலும் உளத்தொழிற்பாட்டின் கட்டமைப்பு ரீதியான பாதிப்புகளை நோக்கின், மன நிலைகள் (**Mood:** anger, aggressiveness, irritability, anxiousness, restlessness, mood swings, crying) நித்திரை நிலை (**Sleep:** insomnia, restless sleep, excessive sleepiness) உணர்வுசார் நிலைகள் (**Emotional:** feeling empty, sad, hopeless, anxious feelings of incompetence) நடத்தைசார் நிலைகள் (**Behavioral:** loss of interest, feeling tired easily, thoughts of suicide, drinking excessively, using drugs, engaging in high-risk activities) சிந்தனைசார் நிலைகள் (**Cognitive:** inability to concentrate, difficulty completing tasks, thinking or talking more slowly) மற்றும் பாலியல்சார் பிறழ்வுகள் (**Sexual:** reduced sexual desire, lack of sexual performance) மேற்கூறப்பட்ட நிலைகளில் மேற்கிளம்புகின்ற தாக்கங்களானவை மனிதனது உளவுரணைச் சிதைத்து எதிர்கால வாழ்வையே சூனியமாக்குகின்றன. மனமானது கிளர்ச்சி நிலையிலிருக்கையில் மனதில் எண்ண அலைகள் அதிகரித்து, சுவாச வேகமும் அதிகரிக்கும். யோகத்திலுள்ள பிராணாயாமம் மற்றும் தியானப்பயிற்சிகள், சுவாசத்தை ஆழமாக்கி எண்ண அலைகளை குறைத்து தெளிவான - அமைதியான மனநிலையை உருவாக்குகின்றன.

எனவே, ஒருவர் உடல், உள, நடத்தை ரீதியாக நன்நிலையிலிருக்கும் போதே அவர் ஆன்மிக நிலையிலும் சிறந்த நிலையை அடையலாம். ஆன்மிகமானது ஆன்மா சம்பந்தப்பட்டது. மனித வாழ்க்கை முழுமை பெறுவதற்கு ஆன்மிகப் பண்புகளை வளர்க்க வேண்டியது முக்கியமானதாகும். இதற்கு நம் முன்னோர்களான சித்தர்கள், யோகிகள் வகுத்துரைத்த சீரிய வாழ்வியல் நெறிநின்று அதாவது ஏனைய யோக முறைகளுக்கெல்லாம் தலையாயதாக திகழும் இராஜயோகம் வலியுறுத்துகின்ற முக்கிய விடயப்பரப்பாகிய அட்டாங்க யோகம் எனும் எட்டுவகையான வாழ்வியற் படிமுறைகளை - வரையறுத்துரைக்கப்பட்ட பயிற்சி முறைகளை தக்க குரு மூலமாக கிரமமாகக் கடைப்பிடித்து ஒழுகினால் வாழ்வின் பூரணத்துவமான நிலையை எய்த முடியும் என்ற கருத்தியல் இராஜ யோகத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. எனவே இத்துணை சிறப்பு வாய்ந்த நீண்ட வரலாற்றுப் பாரம்பரியமுடைய இக்கலையை பேணிப் பாதுகாத்து எதிர்கால சந்ததிக்கும் அளிப்பதற்கு அனைவரும் ஈடுபட்டுழைக்க வேண்டியது அவசியமாகும்.

☼ ☼ ☼

# இந்து சமூகத்தில் தனி மனிதன்

பொ.கோகிலன்,

ஒரு சமூகத்தின் முதல் அடிப்படைக் கூறாகக் காணப்படுபவன் தனிமனிதன் ஆவான். பல மனிதங்கள் இணைந்தே ஒரு சமூகம் கட்டமைக்கப்படுகின்றது. ஒரு சமூகத்தின் அகக்கூறாக அதன் பண்பாடும், புறக்கூறாக அதன் நாகரிகமும் காணப்படுகின்றது. பாரத தேசத்தினைத் தளமாகக் கொண்ட மதமாக இந்துமதம் காணப்படுகின்றது. இந்து மதத்தினைப் பின்பற்றும் சமூகம் இந்து சமூகமாகும். அதன் பழமைக்கு இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்த சிந்து வெளிநாகரிகமும் அதன் சிறப்புக்கு அ்.து இன்றுவரை பேணிவரும் இந்துப் பண்பாடும் எடுத்துக் காட்டாகும். இத்தகைய பழைமைக்கும் சிறப்பிற்கும் இந்து சமூகம் நன்கு கட்டமைக்கப்பட்டிருந்தமையே பிரதான காரணமாகும். இந்து சமூகத்தின் அடித்தளமான தனிமனித வாழ்வியல் கோலங்களை இந்து சமயம் கால ஓட்டத்திற்கு ஏற்ப காலங்காலமாக செப்பனிட்டு வருகின்றது.

உலகில் தோன்றிய முதல் இலக்கியமான "வேதங்கள்" சமூகக் கட்டமைப்பில் தனிமனிதன் பெறுகின்ற முக்கியத்துவம் பற்றி விதித்துள்ளது. தனிமனிதன் வாழ்க்கைப் படிநிலைகள் பற்றியும் ஒவ்வொரு காலகட்டத்திலும் அவன் ஆற்ற வேண்டிய கடமைகள் பற்றியும் விதியாகக் கூறப்பட்டுள்ளன. அவையாவன:

1) பிரம்மச்சரியம் → மாணவ நிலை
2) கிருகஸ்தம் → இல்லற நிலை
3) வானப்பிரஸ்தம் → துறவு நிலை
4) சந்நியாச நிலை → முழுத்துறவு நிலை

என்பனவாகும். இந்த நான்கு வாழ்க்கைப் படிநிலைகளிலும் தனிமனித வாழ்வு முழுமையாக உள்ளடக்கப்பட்டிருந்தது. இந்த நான்கு வாழ்க்கைப் படிநிலைகளின் படி கல்வி, உலகியல், துறவு முற்றுமுணர்தல் என்ற ரீதியாக வாழ்வியல் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. இந்த நான்கு நிலைகளிலும் கிருஹஸ்தனே பிரதானமானவனாகக் காணப்பட்டான். அவனே ஏனைய மூன்று படிநிலைக்குரியவர்களிற்கும் ஆதாரமாய்க் காணப்பட்டான். இந்துமதம் காட்டும் புருடார்த்தங்களின் வழி அவன் செயற்பட வேண்டும். அறவழி நின்று பொருளீட்டி இன்பம் துய்த்து வீடுபேறு அடைய வேண்டும்.

இந்து சமூகப் பின்னணியில் வருணாச்சிரம தர்மமும் சுட்டித்து காட்ட வேண்டிய விடயமாகும். சமூகத்தின் இயங்கு நிலைக்குச் சமூக

வகுப்பினரது ஒழுங்கான இயக்கம் இன்றியமையாததாகும். ஆரம்பகால இந்துசமூகம் பிராமணர், சத்திரியர், வைசிகர், சூத்திரர் என்ற நால்வகை வர்ணாச்சிரம தர்மத்தை உள்ளடக்கியதாகக் காணப்பட்டது. நால்வகை வர்ணத்தினருக்குமான கடமைகள் வகுக்கப்பட்டிருந்தது. அவ்வாறு வகுக்கப்பட்டு உரிய கடமைகள் சமூகத்தில் நிறைவேற்றப் பட்டமையால் சமூகத்தில் ஏற்படும் பிணக்குகள், குறைகள் தீர்க்கப் பெற்றன.

தனிமனிதன் ஆற்றும் கருமங்கள் சமூகத்திற்கு நலம் பயப்பனவாக அமைய வேண்டும் என்று இந்து இலக்கியங்கள் குறிப்பிடு கின்றன. தானாற்றும் கருமங்கள் தன்னலமற்றதாகவும் பொதுநலம் வாய்ந்ததாகவும் காணப்பட வேண்டும். செயலில் பற்றுவைக்காது செய லாற்ற வேண்டுமென்ற சிந்தனை பகவத்கீதையில் கிருஷ்ணரால் உபதே சம் பெறுகின்றது. தனிமனிதனை செயல்வழி வீரனாக மாற்றுவதற்கு பகவத்கீதை சிந்தனை ஏற்புடையது. எமது கடமையை உணர்ந்து ஆற்றும் கர்மத்தின் பலனை இறைவன் பால் விடுத்து செயலாற்றுவதை மனிதனின் பெரும் தர்மமாகுமென்று பகவத்கீதை கூறுகின்றது.

தனிமனிதனது சமயவாழ்வில், ஏனைய சமயங்கள் துறவறத்தை வலியுறுத்த இந்து சமயமானது இல்லறத்தை வழிகாட்டுகின்றது. அதாவது இல்லறத்தில் இருந்து கொண்டே உலக வாழ்வில் எல்லையில்லா பேரா னந்தமெனப்படுகின்றது. வீடுபேற்றினை அடைய முடியும். உலகியல் வழி ஆன்மிகத்தைப் போதிக்கும் சமயமாகவும், சிற்றின்பமூடாக பேரின்பம் வழங்கும் ஒரு சமயமாகவே இந்து சமயம் காணப்படுகின்றது. எமது முன்னோர்கள் இதனை தமது வாழ்விலும் வாழ்ந்து காட்டியுள்ளனர். அந்தவகையில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் முதன்மை பெறுகின்றனர்.

"மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவில்லை
கண்ணில் நல்ல.·.துறும் கழுமலவளநகர்
பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகையிருந்ததே"

என்று திருஞானசம்பந்தர் சிவபெருமான் உமையம்மையுடன் சேர்ந்து இருப்பதை எடுத்துக்காட்டாகக் கூறி மக்களை வழிப்படுத்துவது நயத்திற் குரியது. 'வாழநினைத்தால் வாழலாம் வழியா இல்லை பூமியில்' என்ற நேரிய சிந்தனை உவப்பானதாக சம்பந்தர் தேவாரம் அமைந்து காணப்ப டுகின்றது. உலக வாழ்வில் மனிதன் நேரான சிந்தனையைக் கொண்டி ருக்கும் பட்சத்தில் அவன் வாழுகின்ற சமூகமும் செம்மையடைகின்றது.

இந்து தத்துவப் பகுதியிலும் தனிமனிதனை மேன்மைப்படுத்தும் எண்ண ஓட்டங்கள் காணப்படுகின்றன.

"அயம் ஆத்மா பிரமம்மம்" → இந்த ஆத்மா பிரமனே (மாண்டூக்கிய உபநிடதம்)

"தத்துவம் அஸி" → அது (பிரம்மம்) நீ (சந்தோக்ய உபநிடதம்)

"அஹம்பிரம்மாஸ்மி" → "நான்பிரம்மம்" (பிருஹதாரண்ய உபநிடதம்)

தனிமனிதன் தன்னை உணர்கின்ற சந்தர்ப்பத்தில் வீடுபேறு அடைய முடியும் என்பதே இதன் உட்கிடை. சங்கரர் வழக்கில் கூறுவோமேயானால் "ஒருவன் அறிவினால் தன்னைப் பிரம்மமாக உணரலாம். அதுவே கேவலத்வைதமாகும். திஹாசங்களிலும் இச் சிந்தனை வேறுபடுவதனைக் காண முடியும். இராமர், கிருஷ்ணர் முதலான பாத்திரங்களின் வழி இவ்வுண்மை வெளிப்படுத்தப்படுகின்றது. ஒருவன் தானாற்றும் தன்னலமற்ற கர்மத்தினால் தன்னை அறியும் (பிரம்மம்) அறிவினாலும் மேன்மை பெறுகின்றான். இதனையே உபநிடதங்கள் தத்துவமஸி (நான் பிரம்மமாகிறேன்) என்ற சிந்தனையூடாக வெளிப்படுத்தப்படுகின்றது.

இந்து மதத்தினைப் பொறுத்தமட்டில் காலத்திற்குக் காலம் தோன்றிய சமயப் பெரியார்கள் இந்து சமூகத்தைச் சிறந்த முறையில் வழிப்படுத்தி வந்துள்ளனர். முடிக்குரிய இந்து சாம்ராச்சியங்களும் கட்டிய ஆலயங்கள் வெறுமனே சமய நிறுவனங்களாக அல்லாமல் சமூகத்தை மையப்படுத்தி தனிமனித நிறுவனங்களாக அல்லாமல் சமூகத்தை மையப்படுத்தி தனிமனித மனவளக்கலை விருத்தியில் பெரும்பங்காற்றி வருகின்றது. அது மட்டுமல்லாது சமூக ஒற்றுமைக்கும் சமூகப் பண்பாட்டிற்கும் நிலைக்களங்களாக இந்து ஆலயங்கள் விளங்குகின்றன. எமது எண்ணங்கள், செயல்கள் சீர்படுகின்ற பட்சத்திலேயே நாம் இன்னொருவரிற்கு அறிவுரை கூற முடியும். எமது முன்னோர்கள் கூறிய பழமொழி ஒன்று இங்கே சிந்தனைக்குரியது. "உன்னைத் திருத்து உலகம் தானாக திருந்தும்" இந்த மொழியை நன்குணர்ந்த நம்முன்னவர்கள் நமது வாழ்விலும் அதனைப் பின்பற்றத் தலைப்பட்டனர். இவ்வாறே வாழ்ந்தும் வழிகாட்டியாகவும் எம்மு நிற்பவர்கள் சைவநாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களும் மற்றும் சமயப் பெரியார்களும் ஆவார். இவர்கள் காட்டிய வழி இந்து சமூகம் கால ஒட்டத்திற்கு ஏற்ப நெகிழ்ச்சியுடனான சீர்மியம் பெறுகின்றது.

**அன்பர்பணி செய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால்**
**இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே**

- தாயுமானவர்

# அன்னை வழிபாட்டில் ஸ்ரீசக்கர பூசை [தாந்திரீகம்]

நவ.லிங்கேஸ்வரன்

சிவன் அறிவின் ஆதாரம் என்றால் சக்தி அதன் இயக்கமாக அமைகின்றாள். இச் சக்தியை முழுமுதல் தெய்வமாகக் கொண்டு இடம் பெறும் வழிபாடு சாக்த வழிபாடு ஆகும். சக்தி இல்லாமல் எதையும் இயக்க முடியாது என சாக்தம் கூறுகின்ற போதும் இந் நெறி சைவத்துடன் இணைந்த நிலையில் சிறப்புப் பெறுகின்றது. சக்தி மந்திரம், தந்திரம், யந்திரம் ஆகிய நிலைகளில் வழிபடப்படுகிறாள்.

இறைவனைப் போற்றுவதற்காக விம்ப வடிவிலும், யந்திர வடிவிலும் வழிபாடுகள் அமைந்திருக்கின்றன. உருவ வழிபாட்டின் போது அபிசேக ஆராதனைகளும், கும்ப வடிவில் குரு மூலமான ஆவாகணம், தியானம், அலங்காரம், உபகாரம் எனப் பூசை முறைகளாகவும், யந்திர வழிபாட்டின் போது ஸ்தாபனம், தியானம், ஆவாகணம், அபிசேகம், உபசாரம், ஆவரண பூசை, தர்ப்பணம், ஹோமம், என பூசை முறைகளாகவும் அமைகின்றன. யந்திரங்கள் தெய்வீக சக்திகளின் வரி வடிவம் எனக் கொள்ளப்படுகின்து. மந்திர ஒலிகளின் அதிர்வுகளினாலேயே இவை உயிரோட்டம் பெறுகின்றன. இத் தெய்வத்தினுடைய வரி வடிவம் மனிதனினுள்ளே உறங்கிக் கிடக்கின்ற சக்தியைத் தட்டி எழுப்புகின்றது. இதனால் தெய்வ வழிபாட்டில் யந்திர வழிபாடு அதி முக்கியம் பெறுகின்றது. இதனை அருவுருவ வழிபாடாகவும் கொள்ள முடியும். எந்தெந்த தெய்வங்களை பூசிக்க விரும்புகின்றோமோ அந்தந்தத் தெய்வங்களுக்குரிய அளப் பெரும் சக்தியை வரி வடிவமாக்கித் தங்கம், வெள்ளி, பித்தளை, பஞ்சலோகம் போன்றவற்றால் தகடுகளில் அமைத்து செய்யும் பூசை யந்திர பூசையாகும். இவ்வகையில் அம்பிகையின் சக்கரமான ஸ்ரீசக்கரத்தையே சக்கரராஜம் எனக் குறிப்பிட்டு சக்கரங்களுக்கெல்லாம் முதன்மை அளித்துப் போற்றப்படுகின்றது.

சக்தியை வழிபடும் முறைகளில் ஸ்ரீசக்கர வழிபாடும் ஒன்றாகும். இவ் வழிபாட்டினை சாக்த தந்திரங்கள் ஸ்ரீவித்தியா உபாசனை எனக் கூறுகின்றது. இவ் உபாசனையில் ஸ்ரீசக்கர வழிபாடே மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றது. ஜந்திரத்தின் நடுவிலுள்ள பிந்துவில் எழுந்தருளச் செய்து பரிவாரங்கள் தனித் தனி பாவனையாகவும், ஏனைய கோணங்கள் அம்பிகையை நோக்கிய வண்ணம் அமைந்ததாகவும் பாவனை செய்து வழிபடுதலே தாந்திரீகத்தில் உள்ள ஸ்ரீசக்கர பூசையாகும். ஸ்ரீசக்கர பூசை செய்யும் போது இவ்வுடம்பை ஸ்ரீசக்கரம் எனவும் இவற்றுள் இருக்கும் ஜீவசைதன்யரை ஸ்ரீதேவி எனவும் பாவனை செய்ய வேண்டுமென ஸ்ரீராம கிருஸ்ண பரம ஹம்சர் குறிப்பிடுகின்றார். இவர் தனது

சரீரத்தையே யந்திரமாகக் கருதினார். இவர் அன்னையிடம் நான் யந்திரன் நீ யந்திரி எனக் குறிப்பிட்டுள்ளார்.

பாபனோ உபநிடதத்தில் உடம்பும் யந்திரமும் ஒன்று என்னும் தத்துவம் மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. ஸ்ரீசக்கர பூசை தொடங்கும் முன் பாபனோ உபநிடதத்தினை பாராயணம் செய்வது சம்பிருதாயமாகும். அத்துடன் பிரமாண்ட புராணத்தில் வருகின்ற ஸ்ரீலலிதா சகஸ்ரநாமங்கள் **ஸ்ரீசக்கரராஜநிலையாள், நேருநிலையாள்,சக்கரராஜநிகேதனா,திரிகோடிகா,பிந்துமண்டலவாஸினி** நாமங்கள் தேவி ஸ்ரீசக்கரத்தில் உறைவதைக் குறிப்பிடுகின்றன.

ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாளின் காதுகளில் ஸ்ரீசக்கரமாக தோடுகள் விளங்குவதை தேவி பாகவதம் குறிப்பிடுகின்றது. தேவியின் தோடுகளே பிரளைய காலத்தில் சிவனைக் காப்பாற்றியதாக சௌந்தர்யலகரி கூறுகின்றது. இவ்வகையில் மிகவும் சக்தி வாய்ந்த தெய்வீகச் சின்னமாக ஸ்ரீசக்கரம் விளங்குகின்றது. எந்தத் தேவதையின் சக்கரமும் ஸ்ரீசக்கரத்தினுள் அடங்கும் என்பதனால் ஸ்ரீசக்கரத்தை வைத்து எந்த தேவதையும் வழிபட முடியுமென தந்திரங்கள் கூறுகின்றன. ஸ்ரீசக்கரத்தின் அமைப்பானது மிக உயரிய தத்துவத்தினை கொண்டது. அவ்வகையில் அதன் அமைப்பானது 1.பிந்து 2.முக்கோணம் 3.எண்கோணம் 4.இரண்டு பத்துக் கோணம் 5.பதின்னான்கு கோணம் 6.எட்டுத் தளம் 7.பதினாறு தளம் 8.மூன்று வட்டம் 9.மூன்று காட்டுப் பூபுரம் எனக் காணப்படுகின்றது. இதில் முக்கோணம், எண்கோணம், இரண்டு பத்துக் கோணம், எட்டுத் தளம், பதினான்கு முக்கோணம் என்ற ஐந்தும் **சக்தி சக்கரம்** என்றும் பிந்து, எட்டு இதழ் கமலம், பதினாறு இதழ் கமலம், பூபுரம் என்ற நான்கும் **சிவன் சக்கரங்கள்** எனவும் கூறப்படுகின்றது. இவ்வாறு ஐந்து சக்தி சக்கரங்களும், நான்கு சிவசக்கரங்களுமாக ஒன்பது சக்கரங்களைக் கொண்ட சிவசக்தி இருவருடைய வடிவமாக ஸ்ரீசக்கரம் விளங்குகின்றது. சக்தி சக்கரங்கள் ஐந்தும் கீழ் நோக்கியும் சிவ சக்கரங்கள் நான்கும் மேல் நோக்கியும் விளங்குகின்றன. இச் ஸ்ரீசக்கரமானது சிவசக்தி ஐக்கியத்தினைப் புலப்படுத்துகின்றது. இதிலுள்ள முக்கோணத்தை பிந்துவோடும், எட்டுக் கோணத்தை எட்டு இதழ்க் கமலத்தோடும் இரண்டு பத்துக் கோணத்தை பதினாறு இதழ்க் கமலத்தோடும் பதினான்கு இதழ் கமலத்தைப் பூபுரத்தோடும் ஐக்கியப்படுத்தி ஸ்ரீசக்கரத்தில் சிவசக்தி ஐக்கியம் கொள்ளப்படுகின்றது. இதனை 'சிவசக்தி ஐக்கிய ரூபினி' என்ற அம்பிகையின் நாமம் நினைவு கூறப்படுகின்றது.

இவ்வாறாக சக்தி சக்கரத்திற்கும், சிவசக்கரத்திற்கும் உள்ள இணை பிரியா சம்மந்தத்தினை எவன் அறிந்து கொள்கிறானோ அவன் ஸ்ரீசக்கர வழிபாட்டை மேற்கொள்ளத் தகுதி வாய்ந்தவன். சௌந்தர்யலகரி **'ஸ்ரீசக்கர அமைப்புப் பற்றி ஐந்து கோணங்களும், நான்கு கோணங்களுமென ஒன்பது கோணங்களை கொண்டது எனவும் எல்லாமாக 43 கோணங்களை உள்ளடக்கியது'** எனக்

கூறுகின்றது. அம்பிகையின் ஒவ்வொரு வடிவங்களுக்கும் யந்திரங்கள் பலவாறாகக் காணப்பட்டாலும் அவற்றுள் ஸ்ரீசக்கரமே சிறந்ததாகும். இதனை யந்திரராஜன் என வணங்குவார்கள். இது ஒன்பது சக்கரங்களைக் கொண்டதால் நவயோகி சக்கரம் எனவும் 43 முக்கோணங்களைக் கொண்டதால் திரிஷத்வரிம் சத்சக்கரம் எனவும் தேவியின் மாத்ருஹா சக்திகள் உள்ளடங்கியிருப்பதால் மாத்ருஹ சக்கரம் எனவும் கூறப்படுகின்றது.

ஸ்ரீசக்கரத்தினை அதன் நிலையினை ஒட்டி

**1.பூப்ரஸ்தார ஸ்ரீசக்கரயந்திரம்**

**2.கைலாச ப்ரஸ்தார ஸ்ரீசக்கரயந்திரம்**

**3.மேரு ப்ஸ்தார ஸ்ரீசக்கரயந்திரம்** என 3 வகையாக அழைப்பர். இவை முறையே தகடாகவும், தட்டையாகவும், உயரமாகவும், காணப்படும். கண்ணுக்குப் புலனாகாத சூக்கும வடிவாக மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை ஆகிய உடலிலுள்ள 6 சக்திகளையும் ஓரடி வடிவில் தோற்றம் பெறச் செய்ய கையாண்ட வழிவகையே கோடுகளால் வரையப்படும் யந்திர முதற் தோற்றமாகும். ஸ்ரீசக்கர அமைப்பானது பல உயரிய தத்துவ சிந்தனைகளைக் கொண்டு விளங்குகின்றது. அவையாவன

1.வட்டம் - முதலும் முடிவில்லாத இறைத் தன்மையைக் காட்டுகின்றது.

2.முக்கோணம் - படைத்தல், காத்தல், அழித்தல், ஆகிய முத்தொழில்களையும், நிகழ்காலம், எதிர்காலம், இறந்தகாலம் ஆகிய 3 காலங்களையும் உறக்கம், கனவு, விழிப்பு ஆகிய 3 நிலைகளையும் சாத்வீகம், ராஜசம்,தாமஸம், ஆகிய 3 குணங்களையும் காட்டுகின்றது.

3.மேல் நோக்கிய முக்கோணம் - வழிபடுவோரின் உயர் இலட்சியத்தைக் காட்டுகின்றது.

4.கீழ் நோக்கிய முக்கோணம் - பராசக்தியின் அம்சம்

5.ஒரு கோணம் மேல் நோக்கியும் மறு கோணம் கீழ் நோக்கியும் உட் கோணமாக இருக்கின்றது. வழிபடுபவர்களுடைய உயர் இலட்சியத்தையும் இறையருள் அவனை நோக்கி வருவதையும் குறிக்கிறது.

6.மேல் நோக்கிய முக்கோணம் - சிவனைக் குறிக்கின்றது.

7.கீழ் நோக்கிய முக்கோணம் - சக்தியைக் குறிக்கின்றது.

8.சற்கோணம் - சிவசக்தி ஐக்கியத்தைக் குறிக்கின்றது.

9.தாமரை விரிவடைவது வழிபடுவோனின் உட் சக்தி விரிவடைவதைக் காட்டுகிறது. தாமரை குவிவது வழிபடுவோனின் மனமும் அம்பிகையிடம் குவிய வேண்டும் என்பதை விளக்குகின்றது.

10.ஸ்ரீசக்கரத்திலுள்ள 43 முக்கோணங்கள் - தேவி ஒருத்தியே ஆரம்பத்திலிருந்தாள் எனவும் பின்

9 சக்திகளானாள் எனவும் இந்த 9 உடன் 10 இந்திரியங்கள், 5 பிராணண், 4 கரணங்கள், பஞ்ச பூதங்கள் எனப் 10 விடயங்களாக 43 முக்கோணங்களில் விளக்கப்படுகின்றன. இதனை திரிபுரே உபநிடதம் கூறுகின்றது.

11.ஸ்ரீசக்கரத்திலுள்ள 16 தளம் - அந்தமானது 16 கோணதிசை உடையதாக விளங்குவதையும் பிண்டமாகிய நமது உடம்பானது 2 கண், 2 காது, 2 கை, 2 தொடை, 2 கால், தலை, மூக்கு, வாய், கழுத்து, நெஞ்சு, முதுகு என 16 அவயவங்களை உடையதாக விளங்குகின்றது.

இச்சக்கரமானது விக்கிரகங்களைப் போல வழிபடுவதற்குரிய நுட்பமான அளவுப் பிரமாணங்களின் படி அமைக்கப்பட்டுள்ளது. விக்கிரகத்திலுள்ள அவயவத்தில் சிறிது கூடினாலும், குறைந்தாலும் சாதாரண பார்வையில் அக் குறைபாடு தோன்றாது. ஆனால் சக்கரத்தினுடைய முக்கோணங்கள் சிறிது விரிந்தோ, ஒடுங்கியோ அமைந்தால் அது கோடுகளின் சக்தியில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்துவதோடு 43 கோண அளவிற்கு மேலதிகமாய் சிறு கோணங்களை உண்டாக்கிவிடும். அவ்வாறு அமைந்த சக்கரங்களை வைத்து பூசை செய்தால் தீமை உண்டாகும் எனக் கூறப்படுகின்றது.

ஸ்ரீசக்கர பூசையின் ஆரம்பத்தில் குரு வழிபாடு இடம் பெறும். குருவின் உபதேசம் மூலமாகவே அன்னையின் பரம இரகசியங்களை ஒருவன் தனது சாதனையினால் பெறுகின்றான். இதனால் தான் குரு வழிபாடு முதலில் இடம் பெறுகின்றது. பஞ்ச பூதங்களாலான இவ் உடம்பின் யந்திரங்களை உரிய முறையில் உச்சரித்து உடலை பூசைக்குரியதாக்கி தனது இதயக் கமலத்தில் அம்பிகையை எழுந்தருளச் செய்து மானசீகமாக வழிபாடு இடம் பெறுகிறது. எனவே அம்பிகைக்கு இடம் பெறும் பூசைகளான கலச பூசை, கும்ப பூசை என்பவற்றுடன் ஸ்ரீசக்கர பூசையும் சிறப்பிடம் பெறுகின்றது. ஸ்ரீசக்கர பூசை ஒரு மகிமை வாய்ந்த வழிபாட்டிற்கு வழிவகுத்ததுடன் அம்பிகையை அன்னையாக வழிபடும் முறையையும் ஏற்படுத்தியது. இதனால் இவள் பராசக்தி மகாதிரிபுர சுந்தரி என அழைக்கப்படுகின்றாள். இந்த யந்திரத்தில் 43 முக்கோணங்களும் பிந்துவில் உள்ளடங்குகின்றது. அன்னை பராசக்தியாகவும், திரிபுர சுந்தரியாகவும் வழிபடப்படுகின்றமை ஸ்ரீசக்கர வழிபாட்டின் உன்னத அம்சமாகும்.

ஸ்ரீசக்கரம் தேவியின் பிரதான மந்திரமாகிய பஞ்சாட்சர வடிவமாகக் கொள்ளப்படுகின்றது.

1. க-க-க-ஈ எனும் அட்சரங்களிலிருந்து – பிந்து
2. உற்றீம் - உற்றீம் - உற்றீம் என்பதிலிருந்து – முக்கோணம் , எண்கோணம்
3. ஹ - ஹ - ஏ என்பதிலிருந்து – உட்கோணம் 10, வெளிக்கோணம் 10, கோணங்கள் 14
4. ஸா - ஸா என்பதிலிருந்து – எட்டுத்தள கமலம், 14 தள கமலம்
5. வ - வ - வ எனும் அட்சரங்களில் இருந்து – சக்கரம் தோற்றம் பெற்றன.

இச் ஸ்ரீசக்கரத்தை பக்தியுடன் தரிசனம் செய்தால் நூறு யாகங்களை செய்வதால் ஏற்படும் பலன் கிடைக்கும் எனவும் அதன் அபிசேக தீர்த்தத்தை தலையில் புரோட்சித்துப் பருகினால் கங்கை முதலிய ஆயிரம் புண்ணிய தீர்த்தங்களை கோடி முறை ஸ்நானம் செய்வதால் ஏற்படும் பலன் கிடைக்குமெனவும் கூறப்படுகின்றது. இவ் யந்திர உபாசனையானது விக்கிரக உபாசனையை விட சிறந்ததாக கருதப்படுவதனால் தான் கோயிலின் மூல விக்கிரகத்தின் பீடத்திற்கு அடியில் சக்தி வாய்ந்த யந்திரங்கள் வைத்து பிரதிஸ்டை செய்யப்படுகின்றது. இது யந்திர உபாசனையின் சிறப்பை புலப்படுத்துகின்றதெனலாம்.

☼ ☼ ☼

# திருக்குறள் சுட்டும் மருத்துவம்

கஸ்த்தூரி பரமானந்தன்

பண்டைத்தமிழ் இலக்கியங்கள் தமிழர்களின் அறிவுக் கருவூலமாகத் திகழ்கின்றன. தமிழ் இலக்கியங்கள் எடுத்துக் கூறாத கருத்துக்களே இல்லை. அவ்விதமாகவே உடலுக்கு ஊறு விளைவிக்கும் நோய்களைப் பற்றியும் எடுத்துரைக்கின்றன. உண்ணும் உணவே மருந்தாகவும், மருந்தே உணவாகவும் பயன்பட்டதை பல ஆயிரம் ஆண்டுகளிற்கு முன்பே தமிழர்கள் அறிந்திருந்தனர்.

தமிழிலக்கியங்களிலே மருத்துவம் பற்றிய எண்ணக்கருக்களைச் சங்கமருவிய காலத்திலேயே முதன் முதலாக விரிவாகக் காணக்கூடியதாக உள்ளது. இக்காலப்பகுதியில் எழுந்த நூல்களிற் சில சித்த, ஆயர்வேத மருத்துவங்களிற் கையாளப்படும் முக்கிய கூட்டுமருந்துச் சரக்குகளான ஏலாதி, சிறுபஞ்சமூலம், திரிகடுகம் முதலியவற்றின் பெயரைத்தாங்கி வெளிவந்துள்ளன.தமிழ் வேதம் எனப்போற்றப்படும் திருக்குறளில் மனித குல வாழ்விற்கும், மேன்மைக்கும் தேவையான பல கருத்துக்கள் சிறப்பாக எடுத்துரைக்கப்படுகின்றன. "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதை மக்களுக்கு உணர்த்தும் பொருட்டு வள்ளுவர் "மருந்து" பற்றி தனி அதிகாரம் (95ஆம் அதிகாரம்) அமைத்து மருத்துவத்திற்கு சமூகத்தில் சிறப்பான இடம் கொடுத்துள்ளார்.

வள்ளுவர் கூறும் மருந்தியல் அதிகாரத்தை கூர்ந்து நோக்கும் போது, அதில் கூறப்பட்டுள்ள அரிய கருத்துக்களிற் பல சித்த, ஆயுர்வேத மருத்துவமுறைகளின் அடிப்படைத்தத்துவங்களாக அமைந்திருப்பதைக் காணலாம். இவ்வதிகாரத்தில் வள்ளுவர் நோய்க்கான பிரதான காரணங்கள், உணவுக் கட்டுப்பாடு, நோயை நிதானித்துச் சிகிச்சையளித்தல், மருத்துவத்தின் நான்குவகைப்பாடு என்பவற்றைப் பற்றி மிகநுட்பமாக விளக்கியுள்ளார்.

மனிதனுக்கு நோய் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணம் அவன் உடலிலுள்ள வாதம், பித்தம், கபம் என்று சொல்லப்படுகின்ற மூன்று தாதுக்களின் அல்லது முக்குற்றங்களின் சமநிலைக் குழப்பமேயாகும். உடலின சுகநிலைக்கு இம் மூன்று காரணிகளும் (வாத,பித்த,கபம்) சமநிலையில் இருத்தல் அவசியமாகும். இவை மூன்றும் அவற்றின் இயல்பான தொழிற்பாட்டிலும் பார்க்கக் கூடினாலும் குறைந்தாலும் நோய் ஏற்படும் என்பதைச் சித்த மருத்துவ நூல்கள் கூறுகின்றன. இதே கருத்தையே வள்ளுவரும்,

> "மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்
> வளிமுதலா எண்ணிய மூன்று" (941)

என்ற குறளினூடாக விளக்கியுள்ளார்.

நோய் ஏற்பட்டு அவ்ஸ்த்தைப்படுவதைக் காட்டிலும் 'வருமுன் காப்பதே' சிறந்தது என்பது வள்ளுவர் கருத்தாகும். ஒருவன் தன் உடலுக்கு ஏற்புடையதாய், தனது வயிற்றுப் பசியின் அளவை கருத்தில் கொண்டு உணவு உட்கொள்ள வேண்டும் என்பதனை வள்ளுவர்,

"தீயாள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயாள வின்றிப்படும்" (947)

என்ற குறளினூடாக விளக்குகிறார்.

ஒருவன் முன் உண்ட உணவு செமித்து விட்டதா என்பதை அறிந்து, அதன்பிறகு மாறுபாடில்லாத உணவை அளவாக உட்கொள்ள வேண்டும் என்பதனை,

"அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு" (943)

"மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு" (945)

எனும் குறள்களினூடாக விளக்குகிறார்.

வயிற்றுப்பசியின் அளவை அறியாமல் மிகுதியாக உட்கொண்டால் அதன் விளைவாகப் பலவித நோய்கள் ஏற்படும் என்கிறது தமிழ் மருத்துவம். இதனை வள்ளுவர் பின்வருமாறு விளக்குகிறார்.

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்" (942)

இவ்விதம் உணவுக் கட்டுப்பாடுகளைச் சரிவர மேற்கொண்டால் ஒரு மனிதனுக்கு நோய் ஏற்படாது. அவனுக்கு மருந்தும் தேவைப்படாது என்று கூறும் வள்ளவர் நீடித்த ஆயுள், மனச் சந்தோசம் என்பனவும் உணவுக்கட்டுப்பாட்டின் மூலம் கிடைக்கும் என்கிறார்.

உணவுக் கட்டுப்பாடுகளைச் சரிவர மேற்க்கொள்ளாவிடினும் அல்லது கர்மவினை காரணமாகவும் ஒரு மனிதனுக்கு நோய் ஏற்படலாம். நோய்வரின் மருத்துவரை அணுக வேண்டியது அவசியமாகும். அவ்விதம் வரும் நோயாளிக்கு முதலில் நோய்க்கான குணங்களைக் கொண்டு அந்நோய் இன்னதென்று அறிந்து, அந்த நோய்க்கான காரணங்களைக் கண்டறிந்து, நோயாளியின் பிரச்சினையை வாயாற் கேட்டறிந்து, அந்த நோயைத் தனிப்பதற்கான முறைகளை ஆராய்ந்து, நோயாளியின் உடலுக்குப் பொருந்தும்படி நோயாளியின் வயது, நோயின் அளவு, காலம் மூன்றையும் கருத்திற் கொண்டு மருத்துவர் சிகிச்சையளிக்க வேண்டும். இதனை வள்ளுவர்,

“நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்” (948)

“உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
குற்றான் கருதிச் செயல்” (949)

என்ற குறட்பாக்களால் வலியுறுத்துகிறார்.

மேலும் மருத்துவ முறையானது நோயாளி(உற்றவன்), மருத்துவன்(தீர்ப்பான்), மருந்து(மருந்து, மருத்துவனுக்குத் துணையாய் இருந்து நோயாளியிடம் சென்று மருந்து கொடுப்பவன்(உழைச் செல்வன்) என நான்கு வகைப்பாட்டைக் கொண்டது என்கிறார் வள்ளுவர்.

“உற்றவன் தீர்ப்பான் மருந்து உழைச்செல்வான் என
அப்பால் நாற்கூற்றே மருந்து” (950)

‘மருந்து’ என்ற அதிகாரத்தில் மட்டுமன்றி ஏனைய அதிகாரங்களில் ஆங்காங்கே வள்ளுவர் கூறியுள்ள பல கருத்துக்கள் மருத்துவ நூல்கள் கூறும் பல கருத்துக்களுடன் ஒத்துப் போகின்றதெனலாம்.

உள்ள உறுதியும், அறிவுத் தெளிவும் உடையவர் நோயின் அறிகுறிகள் வந்தவுடன் அதற்குரிய மருந்தினை உண்டு உடனே மருத்துவரிடம் செல்ல வேண்டும். எந்த நிலையிலும் உணர்விலும், செயலிலும் மனத்தை அமைதியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

“சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தாங்குதல் தீது.” (671)

என்ற குறட்பாவழி விளக்குகிறார்.

மக்களின் நல்வாழ்க்கைக்கு ஒழுக்கம் அவசியம் என்பதனை வள்ளுவர் வலியுறுத்தகிறார்.

“நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்” (138)

எனும் குறளினூடாக நல்லொழுக்கம் இன்பமான இல்லற வாழ்க்கைக்குக் காரணமாக இருக்கும், தீயொழுக்கம் பாவத்துக்குக் காரணமாக இருந்து எப்போதும் துன்பத்தையே தரும். எனவே பாவத்தைத் தரும் நோய்க்கு மருந்து கண்டுபிடிக்க முடியாத கொடிய நோயாகிய ‘எயிட்ஸ்’ நோய்க்கு மருந்து கண்டு கூறியுள்ளார் எனலாம்.

மேலும் மதுப்பழக்கத்தினால் ஒருவன் தனக்கு மட்டுமன்றி தன்னைச் சாந்தவர்களிற்கும் மானபங்கம் ஏற்படுத்துகின்றான். மதுப்பழக்கத்திற்கு ஆட்பட்ட

ஒருவரை சமூகம் ஒதுக்கி வைக்கிறது. அவனது மனைவி, தாய், சகோதரர்கள் அவன் நிலைக்காகத் தினமும் வேதனைப்பட்டு நோயாளராகின்றனர். அதனாலேயே சமய இலக்கியங்கள் மதுவை வெறுத்துரைக்கின்றன. வள்ளுவரும் 'கள்ளுண்ணாமை' எனும் தனி அதிகாரத்தை அமைத்து மக்களுக்கு மதுப்பழக்கத்தினால் ஏற்படும் தீமைகளை விளக்குகிறார்

மேலும் வள்ளுவர் சினங்காத்தல் அவசியமென்பதை வலியுறுத்திக் கூறுகிறார். சினங்கொள்வதன் மூலம் மனதில் அமைதியின்மை, குழப்பங்கள் ஏற்பட்டு உடல், உள நோய்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு அதனை வள்ளுவர்,

"தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்"

என்ற குறளினூடாக விளக்குகிறார்.

எனவே இவற்றை தொகுத்து நோக்குகின்ற போது 'மருந்து' என்ற தனி அதிகாரத்தில் மட்டுமன்றி ஏனைய அதிகாரங்களிலும் வள்ளுவர் கூறியுள்ள கருத்துக்கள் மனிதன் நோய் நொடியின்றி நீண்டகாலம் வாழ்வதற்கு பெருந்துணைபுரிகின்றது எனலாம்.

☼ ☼ ☼

# சடங்குகளும், தமிழர் நம் வாழ்வும்

பொ.கீர்த்தனா,

மனிதன் எவ்வளவு தான் அறிவியல் ரீதியிலும், விஞ்ஞான ரீதியிலும் உச்சத்தை அடைந்தாலும் தமது வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் தாம் பின்பற்ற வேண்டிய சடங்கு சம்பிரதாயங்களை மறக்கவில்லை. பாரம்பரியமாக அவை தமது மூதாதையர்களினால் பின்பற்றப்பட்டு வந்தது நாம் அறிந்ததே. எனினும் அவை தற்காலத்தில் நமக்கு ஏற்றால் போல் மாற்றப்பட்டுப் பின்பற்றப்பட்டு வருவதையும் யாரும் மறுக்க இயலாது. சடங்குகள் ஆனவை தமிழர்களின் வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்தவை. எப்படித் தான் மனிதன் நவீன முறைக்கு மாறினாலும் இவ்வாறான சடங்குகளை மனிதனானவன் ஏற்றுக் கொள்ள வேண்டியது ஒரு பாரம்பரியமாகும்.

மனிதனது பிறப்பிலிருந்து இறப்புவரை பல்வேறுபட்ட சடங்குகளைச் செய்கின்றான். குழந்தை பிறந்ததில் இருந்து இறப்பு வரை பெயர்சூட்டு, தொழிட்டியிலிடல், சோறு ஊட்டுதல், ஏடு தொடக்குதல், பூப்பெய்தல், திருமணம், வளைகாப்பு, மகாளயம், ஈமக்கிரியை என்றவாறு பல்வேறு சடங்குகளைச் செய்து வருகின்றோம். இவ்வாறான இச்சடங்குகள் இரண்டு வகைப்படும். ஒன்று மரபு ரீதியானவை. மற்றையது நம்பிக்கை சார்ந்தவை. எனினும் பொதுவாகச் சடங்குகளின் அடிப்படை நம்பிக்கையாகும்.

இச்சடங்குகள் மூலம் குடும்ப அசைவுகள் மட்டுமன்றி சமூகத்தின் ஒன்றிணைவையும் ஏற்படுத்துவனவாகவும் காணப்படுகின்றன. அதாவது சடங்குகளை மேற்கொள்வதன் மூலம் குடும்ப விருத்தியுடன், குடும்பத்தில் சுமூகமான நிலையொன்று ஏற்படுவதுடன், சமூகத்தவருடன் ஒரு அன்னியோன்னிய இணக்கப்பாடும் ஏற்படுகின்றது. உதாரணமாக திருமண நிகழ்வை எடுத்துக் கொண்டால், எமது அனைவரது வாழ்விலும் இடம்பெறும் மிக முக்கியமான சடங்கு திருமணம் ஆகும். அங்கு இரு மனம் சேருவது என்ற நிகழ்வை விட வெவ்வேறுபட்ட பல்வேறு இனத்தவரும் ஒன்று சேரும் களமாக இது காணப்படும்.

அங்கு செய்யப்படும் ஒவ்வொரு சடங்குகளும் ஒவ்வொரு கருத்தை உணர்த்துவதாகவே மேற்கொள்ளப்படுகின்றது. பந்தக்கால் நடுதல், நிச்சயதார்த்தம், ஓமம் வளர்த்தல், தாலி கட்டுதல், கணையாழி எடுத்தல், அம்மி மிதித்தல், அருந்ததி பார்த்தல், மோதிரம் மாற்றுதல், கால் மாறுதல், பால், பழம் சாப்பிடுதல் எனப் பல்வேறுபட்ட சடங்குகள் செய்யப்படுகின்றன. இவை சில மூட நம்பிக்கையாக இருந்தாலும் நாம் பூமியில் நல்லபடியாக வாழ இவை அவசியம் என்ற எண்ணம்

நம்மவர்களிடையே காலங் காலமாகப் பேணப்பட்டு வருகின்றது. அத்துடன் இவ்வாறான சடங்குகளைச் செவ்வனே செய்வதன் மூலம் வம்ச விருத்தி ஏற்படும் என்பதும் நம்பிக்கையாகும்.

நாம் செய்யும் சடங்குகளில் உச்சரிக்கப்படும் மந்திரங்கள் மிகவும் சக்தி வாய்ந்தவை. நாம் உச்சரிக்கும் ஒவ்வொரு சொற்களுக்கும் உயிர் உண்டு. அவை நல்லவையாயின் மனதிற்குச் சந்தோஷத்தையும், கெட்டவை ஆயின் மனதிற்கு வேதனையையும் தரவல்லன. இவ்வாறே எம் மூதாதையர்களால் எழுதப்பட்ட மந்திரங்களுக்கும் சக்தி உண்டு. ஒரு முழு மனிதனைக் கட்டுப்படுத்தித் தன்னகத்தே ஈர்க்கும் சக்தி மந்திரங்களுக்கு உண்டு. இவை சில மூடநம்பிக்கையாக இருந்தாலும், இன்றுவரை இவை நடைமுறையில் எம்மால் காண முடிகின்றது.

சடங்குகளானவை மனிதனது மனதினைச் செம்மைப்படுத்து கின்றது. எவ்வாறெனில் ஒவ்வொரு சடங்குகளையும் நாம் செய்யும் பொது அதனைச் செய்வதற்கான காரணங்களை நாம் அறிவோமானால் அவை மனிதனை நல்வழியில் இட்டுச் செல்வனவாகக் காணப்படும். இப்படியெல்லாம் எமது வாழ்வில் நாம் செய்த சடங்குகளை எல்லாம் தாண்டி இறுதியில் செய்யப்படும் சடங்கு. அதுவே வாழ்வில் இறுதிச் சடங்கு.

இறந்த ஒருவரை இறைவனாகப் பாவித்து இச்சடங்குகள் இடம்பெறும். உடல் சுத்தி, பந்தம் பிடித்தல், சிவதீட்சை அளித்தல், திருவாசகம் ஓதுதல், திருப்பொற்சுண்ணம் இடித்தல், தகனம், சாம்பல் அள்ளுதல், அந்தியேட்டி, ஆண்டுத் திவசம் என்றவாறு பல சடங்ககள் செய்யப்படும். இவை இறந்த ஆத்மா சாந்தியடைய வேண்டும் என்றும், தமது சந்ததி விருத்தியடைய வேண்டும் என்ற நோக்குடனும் செய்யப்பட்டு வருகின்றன.

இப்படித் தமிழர் நம் வாழ்வும் இச்சடங்குகளும் உடலும், உயிரும் போலப் பின்னிப் பிணைந்துள்ளது என்பது தெளிவாகத் தெரிகின்றது. இவை ஒரு புறம் மூடநம்பிக்கைகளாகப் பலராலும் பேசப்பட்டாலும் மறுபுறம் அனைவராலும் பின்பற்றப்பட்டுத் தான் வருகின்றது. எனவே தமிழர்களாகிய எமது வாழ்வில் சடங்குகள் இன்றியமையாதவையாகும்.

நன்றி.

☼ ☼ ☼

# உளவள ஆற்றுப்படுத்தலில் இந்து ஆலயங்கள்

கௌ.சித்தாந்தன்

வாழ்க்கையைப் பற்றிய மேலான உண்மை ஒன்று உண்டு. அது கீழ்நிலையில் இருக்கும் உயிர்களுக்கு இடையில் உடலமைப்போடு நின்று விடுகின்றது. உண்மையாக மேநிலைக்குச் செல்லும் மனித உயிர்களிற்கு அது மன அமைப்பாக விகர்சிக்கின்றது.

உடலமைப்பிலே மேலானது மன அமைப்பு மனதை உடையவன் மனிதன். சிக்மன்ட் பிராய்ட் எனும் உளப்பகுப்பாளர் மனதை அடிமனம், நடுமனம், மேல்மனம் என்று மூன்று வகையாகப்பகுத்து விளக்கியுள்ளார். அடிமனதில் கீழான எண்ணங்கள் உண்டு என்றும் மேல்மனதில் அறம், ஒழுக்கம் சார் விழுமியப்பண்புகள் இருக்குமென்றும் இந்த இரண்டையும் சார்ந்து நிகழ்கால வாழ்வியலுடன் தொடர்புபட்டதாய் நடுமனம் காணப்பெறும் என்றும் அவர் விளக்குவார்.

நாம் வாழும் கலியுகத்தில் பல்வேறு பிரச்சனைகள் மக்களின் மனதைப் பாதித்து வருகின்றன. என்பது மறுக்க முடியாத உண்மை. உளவளத்துணையாளர் எஸ்.டேமியன் அவர்கள் கருதுவது போல எல்லோரும் ஏதொவொரு குறிப்பிட்ட வீதத்தில் மனதளவில் பாதிக்கப்பட்டே உள்ளனர்.

அதிகமான கீழான எண்ணங்களை அடிமனதில் உடையவர்கள் அதிகம் உளத்தாக்கத்திற்கு உட்படுகின்றனர். இதற்கு மேலான எண்ணங்களினை பயன்படுத்துவதன் மூலம் மீட்சி பெற முடியும். ஆரோக்கியமான உடலிற்கு ஏற்ற உணவும் பயிற்சியும் போல மனதைச் சீர்ப்படுத்துவதற்கும் உள்ளீடுகளும் சில பயிற்சிகளும் உள்ளன. கீழைத்தேய நாடுகளைப் பொறுத்தவரை உளச்சீராக்கத்தில் ஆலயங்கள் பெரும் பங்கினை வகிக்கின்றன.

**உளப்பாதிப்பிற்கான காரணிகளும் தீர்வு முயற்சிகளும்**

அண்மைக் காலங்களில் பல்வேறு காரணிகள் எமது மக்களின் உள்ளங்களைப் பாதித்து வந்து கொண்டிருக்கின்றன.

எமது நாட்டிலே சில வருடங்களிற்கு முன்னர் ஏற்பட்ட யுத்தத்தின் விளைவுகள் கூட்டுக்குடும்ப உடைவு, தனிமை, போதைப்பொருள் பாவனை ஊடகங்களின் தவறான வழிநடத்தல்கள் கொலை, கொள்ளை போன்ற காரணிகள் குறிப்பிடத்தக்கன.

இவற்றுக்கான சரியான பரிகாரங்கள் தெரியாமையால் சாதாரண மக்கள் மன நிம்மதிக்காகப் பல்வேறு நிலையங்களை நாடுவர். பலர் மது, புகைப்பிடித்தல் போன்ற தீய பழக்கங்களிற்கு உட்பட்டு தம்மை அழித்துக் கொள்வர். அரசாங்கம் உள மருத்துவ நிலையங்கள் சீர் திருத்தப்பள்ளிகள், பொலிஸ் நிலையம், நீதி மன்றம் என்பவற்றினை அமைத்து சீர்திருத்தும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இவை போன்றவற்றால் சாதிக்க முடியாததைச் செய்தமையே எமது ஆலயங்களின் அரிய சாதனை என்று கூறலாம்.

**ஆலயமும் வழிபாடும்.**

'ஆலயம்' (ஆ + லயம்) எனும் வட சொல்லின் பொருள் "ஆன்மா லயப்படும் இடம்" என்பதாகும். அதாவது ஆன்மாக்களின் மனம் ஒடுங்குமிடம் ஆலயமாகும்.

**"பாழான என்மனம் குவிய ஒரு தந்திரம்**
**பண்ணுவது உனக்கு அருமையோ?"** என்றார் தாயுமான சுவாமிகள் கோயில் என்பது தமிழ்ச்சொல் இறைவன் குடியிருந்து அருள் புரியும் இடம் கோயில்.

'வழிபாடு' என்பதன் பொருள் ஆன்மாக்களுக்கும் இறைவனுக்குமிடையிலான தொடர்பைக் குறிப்பது. இது வழிப்படுத்தல் என்பதிலிருந்து வந்ததாகும்.

"ஆற்றுப்படுத்தல்" என்று இதனைச் சங்க இலக்கியங்கள் கூறுப்பிடுகின்றன. அடியவர்களைத் திருமுருகனிடம் ஆற்றுப்படுத்துவது திருமுருகாற்றுப்படை.

எமது முன்னோர்களின் ஆரம்ப கால வழிபாடு 'கிராமியம்' சார்ந்திருந்தது "கிராமியம்" எனுஞ் சொல் 'கரடுமுரடானது' 'எளிமையானது' எனும் பொருள்களில் வருவது நகரம் சார் ஆலய வழிபாட்டிலும் பார்க்க கிராமம் சார் கோயில் வழிபாட்டிலே அடியவனுக்கும் இறைவனுக்கும் இடையிலான உறவு மிகவும் சமீபத்ததாக இருந்தது அடியவன் நேரடியாக நீரும் மலருங் கொண்டு துதி செய்து தனது உளக்குறையைச் சொல்லி சுகம் பெற்ற வழிபாடு இதுவாகும். மலையடிவாரங்கள், நீர்க்கரைகள், மரநிழல்கள், புற்றிடங்கள் போன்றனவற்றிலே தான் பெரும்பாலும் வழிபாடுகள் நடை பெற்றன. மகா முனிவர்கள், ரிஷிகள், தபசிகள் என்போரினால் மகிமை பெற்ற இவ்விடயங்களிலே தான் பெரிதும் ஆலயங்கள் எழுப்பப்பெற்றன. சித்திகள் பல பெற்று வைத்தியர்களால் ஆற்ற முடியாத உடல், உள நோய்களை ஆற்றிய பெருஞ்சித்தர்களின் சமாதிகள் அமையப் பெற்ற இடங்களிலே உள்ள கோயில்கள் மிகவும் மூர்த்திகரமாக விளங்குகின்றன.

உதாரணத்திற்கு தொண்டைமானறு செல்வச்சந்நிதி கோயில் மகத்துவத்தில் தல விருட்சமான பூவரசின் கீழ் உள்ள சமாதிக்குப் பெரும்பங்கு இருப்பதாகக் கூறப்படுகின்றது. யாழ் குடாநாட்டின் பல இடங்களிலே உள்ள உடை தமது

உடலுடன் இருப்பது கூடத் தெரியாத தீவிரமான மன நோயாளிகள் கூட அந்த மரநிழல் பட்டு நலம் பெற்றதாக நேரில் கண்டோர் கூறுகின்றனர்.

**ஆலய வழிபாட்டுக் கூறுகளும் உளப்பிணி நீக்கமும்**

**ஆகமம் சாராத ஆலயங்கள்**

ஆகமம் சாராத ஆலயங்கள் மடாலயம் போன்ற அமைப்பிலே தான் இருக்கின்றது. இவ்வாலயங்களிலே பக்தன் இறைவனுடன் நேரடியாகப் பேசும் முறை காணப் பெற்றாலும் தன்னம்பிக்கை இழந்த பெரும்பான்மையோருக்கான உளநிவாரணம் தெய்வ கடாசம் பெற்றவர்களினால் நிகழ்த்தப் பெறும் 'உருவாடல்" என்பதினால் தான் ஏற்படுத்தப்படுகின்றது. இதற்கு முன்னோடி சங்ககால வேலன் வெறியாட்டாக இருக்கலாம். வேப்பிலை கொண்டு வீபூதி போடுதல் பலவாறாகக் கழிப்புக் காவல் செய்வது நூல் கட்டுதல், மந்திரித்து நீர் வழங்கல், வாக்குக் கூறுதல் மூலம் உள ஆற்றுப்படுத்தும் நிகழ்வுகள் நடைபெறுகின்றன. மூடக்கொள்கைகள் என்பதிலும் பார்க்க 'உளநிவாரணம்' எனும் பயன் தான் இங்கு முக்கியம்.

**ஆகமம் சார்ந்த ஆலயங்கள்**

சிவாகமங்கள், சிற்பசாஸ்திரங்கள், பத்ததிகள் என்பவற்றின்படி ஒரு முகப்படுத்தப்பட்டவாறு அமைகப்பட்ட ஆலயங்கள் கிரியை முறைகள் வழிபாட்டு முறைகளைக் கொண்டு அமைக்கப்படுபவையாக ஆகமம் சார் ஆலயங்கள் விளங்குகின்றன. விதிக்கப் பெற்ற ஒழுங்கு முறைகளை விளங்கி வழிபாடுகளை மேற்கொள்பவர்கள் மனநலம் பெற்று உய்தி பெறுகின்றனர்.

**உளவளத்துணையாகக் கோயிற்கலைகள்.**

கோயில்களை மையமாக வைத்து வளர்ந்த கட்டடம், சிற்பம், ஓவியம், விக்கிரஹம், இசை, நடனம், முதலான கலைகள் உளவளத்துக்குப் பெருந்துணையாக விளங்குகின்றன.

ஆலயங்களிலே வானாளாவிய உயர்ந்த கோபுரங்கள், விமானங்கள் மனிதனை மனதளவில் மேநிலைக்கு உயர்த்துவன "மலை உயர்ந்தது போல் மனம் உயர்ந்தது" என்பார்கள் கலைத்துவம் வண்ணம் வடிக்கப் பெற்ற சிற்பங்களும் விக்கிரஹங்களும் நம்முடன் புத்துணர்ச்சியுடன் பேசுவன போன்று எமது மனதுக்கு ஆறுதல் தருவன.

பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை அவர்களின் தந்தையாவரான வே.ஆழ்வார்ப்பிள்ளை குருநாகலில் உள்ள கந்தசாமி கோயிலுள்ள சிற்பங்கள்

விக்கிரஹங்களிடம் தனது வேதனைகளைச் சொல்லி ஆறுதல் பெற்றதைச் பற்றி அண்மையில் ஒருவர் கூறினார்.

செல்வச்சந்நிதி கோயில் முன்பாக உள்ள நந்தியின் காதிலே பலர் இரகசியமாக வேதனைகளைச் சொல்லி ஆறுதலடைகின்றனர்.

உயிர்த்துடிப்பான ஓவியங்களும் மனதை இதமளித்து மனதைப் பக்குவப்படுத்தும் தன்மையது. மருந்தின் மூலம் குணம் பெறாத நோய்களும் அருமையான தத்துவப்பாடல்களுக்கு கட்டுப்பட்டு இருப்பதினை தெல்லிப்பழை அரச மருத்துவமனையில் பலர் கண்டிருக்கின்றார் அதுபோல ஆலயங்களின் மரநிழல்களிலே நிகழ்த்தப் பெறும் பஜனைப் பாடல்களில் தாமாகவே ஆர்வங் கொண்டு இணைந்து பாடிப் பரவி அல்லது அதனை மன ஒடுக்கத்துடன் கேட்டு உளநலம் பெற்றோர் அநேகர் இசையினை உளவளத்துணையாளர்கள் Musical Musiuttrat என்று தான் அழைக்கின்றனர். இறைவனும் தமக்கு 'விருப்பமான அர்ச்சனை பாட்டேயாகும்" என்று சுந்தரருக்குக் கூறியதாகப் பெரியபுராண வாயிலாக அறிகிறோம். ஆலயங்களில் பாடப் பெறும் திருமுறைப்பாடல்கள் அனைத்தும் பண் சுமந்த பாடல்களே.

நமது புலன்கள் அடங்காத் தன்மையாக பொறிகள் மதம் பிடித்த களிறுகள் போல் வன இவற்றை அடக்கி நெறிப்படுத்தும் ஆற்றல் திருமறைப் பண்ணிசைக்குண்டு. ஏழாலையில் உள்ள ஓர் ஆலயத்தின் ஒலி பெருக்கியிலே பொன் சுந்தரலிங்கம் அவர்களின் "மெய் தான் விதிர் விதிர்த்து" என்று பாட்டைக் கேட்ட மனநோயாளி ஒருவர் ஆலய வாயிலில் மூர்ச்சித்து விழுந்து எழுந்து நடத்தையில் முன்னேற்றம் பெற்றதை நாமறிவோம். ஆலயங்களிலே திருவிழாக் காலங்களிலே வாசிக்கப்படும் தவில், நாதஸ்வரக் கச்சேரிகளில் உளநலம் பெற்றோர் ஏராளமானவர்கள்.

**அன்றாட ஆலய வழிபாட்டில் உள ஆற்றுபடுத்தல்.**

அலைகின்ற மனம் மேலும் அலைக்கழிக்கப்படுவதால் தாக்குப்பிடிக்க முடியாது உளநெருக்கிட்டுக்கு உள்ளாகின்றது. எனவே தான் அலைகின்ற மனத்தை ஒருமுகப்படுத்தி மனதைச் சீர்ப்படுத்த வேண்டியிருக்கின்றது. ஆலயத்திற்குச் செல்பவர்கள் முதலில் தமது பரபரப்பை நிறுத்த வேண்டும் பலிபீடத்திற்கு இப்பால் வீழ்ந்து வணங்கும் போது தீய எண்ணங்கள் நிலத்திலே வீழ்த்தப் பெற்று மனச் சுத்தத்துடனும் தெளிவுடனும் நிதானத்துடனும் வழிபாடு மேற்கொள்ளப்படுகின்றது.

தொடர்ச்சியாக மூன்று தடவைகள் இறைவனை வலம் வரும் போது பிராணன் ஆகிய காற்று மனதைச் சுத்தப்படுத்துகின்றது. வழிபாட்டு நிறைவில் தியானம் மேற்கொள்கின்ற போது மனம் ஒருமுகப்படுகின்றது. "ஒன்றியிருந்து

நினைமின்கள் உத்தமர்க்கு ஊனமில்லை" (தேவாரம் 4:781) என்று அப்பரடிகள் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

**அன்புப்பெருக்கு**

அன்பு வன்புக்கு எதிரானது வன்பு தான் உளநெருக்கிடுகள் பலவற்றிற்கு காரணமாகின்றது ஆலய வழிபாடு சிறக்க அன்பு அத்தியாவசியமாகின்றது. இது உளவியல் சார்ந்த எண்ணக் கருவாகும் "கண்ணிலே அன்பிருக்க கல்லிலே தெய்வம் வரும்" என்று ஒரு பாடல் உண்டு. அன்பு பெருக மனிதன் மீதான மதம் அடக்கப் பெற வேண்டும். ஆலயத்தின் பூசை முடிவில் சிவாச்சாரியாரிடமிருந்து பிரசாதம் பெறும் போது எமது தலை அவரது பாதத்தில் தாழ்த்தி வணங்குவது முக்கியமானதொன்றாகும். தலையும் பாதமும் வட தென் துருவங்களாகக் கொண்ட காந்த சக்தியின் இணையுடன் போற்றபடுவதாகவும் அதனால் ஒருவரின் உள ஆற்றல் வலிமை பெற்று அதிலிருந்து அன்பு மேலோங்குவதாகவும் சமய ஞானிகள் கூறுகின்றனர்.

ஆற்றல் மிக்க இந்த இன்ப அன்பு தான் உள சீராக்கத்திற்கு மிகவும் உதவுவது "இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என்ற நிலைக்கு காரணமாக அமைவது.

ஆலயங்களிலோ அதன் சமீபமாகயுள்ள மடங்களிலோ நிகழ்த்தப் பெறும் பிரசங்கங்களும் அன்னதான பணிகளும் எமது மனதினை ஆழ்ந்த அன்பைப் பெருக்கி ஆறுதல் அளிப்பனவாகக் காணப்படுகின்றன.

எனவே உண்மையான கோயில் வழிபாட்டுக் கலாசாரம் அருகிச் செல்லும் இக்காலத்திலே ஆலய வழிபாட்டின் அர்த்தத்தையும் உளச்சீராக்கத்தில் அவை வழங்கி வரும் பங்களிப்பை எடுத்துக் கூறுவது பயன் தரும் முயற்சியாகும்.

☼ ☼ ☼

# 2019 ஆண்டுக்கான மஹோற்சவத்தின் அன்னதான பணிகளுக்கு உதவியோர்

| | | |
|---|---|---|
| ஸ்ரீ நதியா நகையகம் | கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் | 2000 ரூபா |
| செல்வி நகைமாடம் | கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் | 2000 ரூபா |
| ரூபிகா நகையகம் | கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் | 1000 ரூபா |
| நியூ சோபிகா நகையகம் | கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் | 500 ரூபா |
| நியூ ஆனிதா நகைமாடம் | கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் | 1000 ரூபா |
| நியூ யதுசன் நகையகம் | கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் | 500 ரூபா |
| மகாலட்சுமி ஜுவல்லறி | கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் | 500 ரூபா |
| கலைவாணி நகையகம் | கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் | 1000 ரூபா |
| தங்கத் திருமகள் நகையகம் | கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் | 1000 ரூபா |
| வினோ நகையகம் | கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் | 1000 ரூபா |
| சிறி மீனாட்சி நகையகம் | கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் | 1000 ரூபா |
| ஸ்ரீ குமரன்ஸ் நகைமாடம் | கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் | 500 ரூபா |
| நிருத்திகா ஜுவல்லறி | கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் | 500 ரூபா |
| நதியா நகையகம் | கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் | 500 ரூபா |
| நியு கமல் செரமிக் | ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் | 100 கிலோ |
| சிற்றி ஹாட்வெயார் | ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் | 1500 ரூபா |
| ரூபா பல்பொருள் வாணிபம் | ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் | 2000 ரூபா |
| ஹயமுகன் ஹாட்வெயார் | ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் | 25000 ரூபா |
| நாதன் கட்டிடப்பொருள் வாணிபம் | ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் | 1000 ரூபா |
| தரன் ரேடர்ஸ் | ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் | 1000 ரூபா |
| தில்லயம்பதி மோட்டார்ஸ் | ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் | 1000 ரூபா |
| புதிய பாமா இரும்பு வாணிபம் | ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் | 500 ரூபா |
| ஆர்.கே.மோட்டார்ஸ் | ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் | 2000 ரூபா |
| ராஜ்குமார் மோட்டார்ஸ் | ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் | 500 ரூபா |
| வளர்மதி ரெக்ரையில் | k.k.s வீதி, யாழ்ப்பாணம் | 2000 ரூபா |
| ஸ்ரீ அம்பாள் ரேடெர்ஸ் | k.k.s வீதி, யாழ்ப்பாணம் | 50 கிலோ அரிசி |
| சிங்கம்ஸ் புடவையகம் | k.k.s வீதி, யாழ்ப்பாணம் | 1000 ரூபா |
| கனேசன் புடவையகம் | k.k.s வீதி, யாழ்ப்பாணம் | 50 கிலோ அரிசி |
| கலயாணி நகை மாளிகை | மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம் | 1000 ரூபா |
| சீமாட்டி புடவையகம் | மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம் | 500 ரூபா |
| இளவரசி சேலைச் சோலை | மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம் | 2000 ரூபா |
| விஜய் சில்க் | மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம் | 1000 ரூபா |
| இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்ஸ் | மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம் | 1010 ரூபா |
| வாணி ரெக்ஸ் | மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம் | 50 கிலோ அரிசி |
| சிவகனேசன் புடவையகம் | பெரியகடை வீதி, யாழ்ப்பாணம் | 25 கிலோ அரிசி |
| சோபிகா ஆடையகம் | 04 நவீனசந்தை, யாழ்ப்பாணம் | 1000 ரூபா |
| லலிதா ரெக்ஸ் | 05,06 நவீனசந்தை, யாழ்ப்பாணம் | 50 கிலோ அரிசி |
| சண்முகம் களஞ்சியம் | ஆஸ்ப்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் | 50 கிலோ அரிசி |
| லிங்கம் களஞ்சியம் | ஆஸ்ப்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் | 10 கிலோ அரிசி |
| கௌசிகன் ரேடெர்ஸ் | ஆஸ்ப்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் | 10 கிலோ அரிசி |
| குவேந்திரராசா ஸ்ரோர்ஸ் | ஆஸ்ப்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் | 10 கிலோ அரிசி |
| கண்ணன் ஸ்ரோர்ஸ் | ஆஸ்ப்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் | 10 கிலோ அரிசி |
| கோபுரம் சில்க்ஸ் | நவீனசந்தை, யாழ்ப்பாணம் | 50 கிலோ அரிசி |
| அம்பாள் மருந்துக்கடை | சந்தை, சுண்ணாகம் | 500 ரூபா |
| குணம் மருந்தகம் | சந்தை, சுண்ணாகம் | 500 ரூபா |
| ராஜ் ஜுவல்லறி | பஸ்நிலையம், சுண்ணாகம் | 1000 ரூபா |
| நிவேதா ஜுவல்லறி | பஸ்நிலையம் அருகாமை, சுண்ணாகம் | 500 ரூபா |

| | | |
|---|---|---|
| ஆ. சு நகைத்தொழிலகம் | பஸ்நிலையம் அருகாமை, சுண்ணாகம் | 500 ரூபா |
| சுகந்தன் நகைத்தொழிலகம் | பஸ்நிலையம் அருகாமை, சுண்ணாகம் | 500 ரூபா |
| நியூ சோதி நகைமாடம் | பஸ்நிலையம் அருகாமை, சுண்ணாகம் | 500 ரூபா |
| நியூ கார்த்திகா ஜுவல்லர்ஸ் | பஸ்நிலையம் அருகாமை, சுண்ணாகம் | 500 ரூபா |
| M.T.S ஜுவல்லர்ஸ் | பஸ்நிலையம் அருகாமை, சுண்ணாகம் | 500 ரூபா |
| தாட்சா பான்சியகம் | பஸ்நிலையம் அருகாமை, சுண்ணாகம் | 500 ரூபா |
| ரஞ்சனாஸ் ரெக்ஸ் | பஸ்நிலையம் அருகாமை, சுண்ணாகம் | 500 ரூபா |
| சுமங்கலி சில்க் | பஸ்நிலையம் அருகாமை, சுண்ணாகம் | 500 ரூபா |
| எக்ஸ்லைன்ட் ரெக்ஸ் | k.k.s வீதி, சுண்ணாகம் | 500 ரூபா |
| திருக்குமரன் காட்வெயார் | k.k.s வீதி, சுண்ணாகம் | 500 ரூபா |
| புகழ் களஞ்சியம் | k.k.s வீதி, சுண்ணாகம் | 500 ரூபா |
| இ.சுப்பிரமணியம் அன்கோ | k.k.s வீதி, சுண்ணாகம் | 500 ரூபா |
| ஜெயகிருஸ்னா காட்வெயார் | k.k.s வீதி, சுண்ணாகம் | 100 கிலோ |
| சித்திவிநாயகர் புத்தகசாலை | k.k.s வீதி, சுண்ணாகம் | 300 ரூபா |
| கண்ணன் களஞ்சியம் | k.k.s வீதி, சுண்ணாகம் | 50 கிலோ அரிசி |
| வேலுப்பிள்ளை செல்வரத்னம் | k.k.s வீதி, சுண்ணாகம் | 5000 ரூபா |
| கஸ்தூரி பான்சி ஹவுஸ் | மந்திகை | 500 ரூபா |
| லிங்கம் பான்சி கூட்ஸ் | கண்டி வீதி, சாவகச்சேரி | 1000 ரூபா |
| சண்முகம் அன் சன்ஸ் | கண்டி வீதி, சாவகச்சேரி | 1000 ரூபா |
| ஜீவன் ஜுவல்லறி | கண்டி வீதி, சாவகச்சேரி | 500 ரூபா |
| ராணி ஜுவல்லறி | கண்டி வீதி, சாவகச்சேரி | 500 ரூபா |
| பகவதி அழகுமாடம் | தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி | 500 ரூபா |
| பொதிகை | தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி | 500 ரூபா |
| லக்கி ஜுவல்லறி | நவீனசந்தை, சாவகச்சேரி | 500 ரூபா |
| இந்திரன் ஜுவல்லர்ஸ் | நவீனசந்தை, சாவகச்சேரி | 500 ரூபா |
| அபி பான்சி | நவீனசந்தை, சாவகச்சேரி | 500 ரூபா |
| செவ்வந்தி | நவீனசந்தை, சாவகச்சேரி | 500 ரூபா |
| ராஜ் புடவையகம் | நவீனசந்தை, சாவகச்சேரி | 500 ரூபா |
| பிருந்தாபன் பல்பொருள் வாணிபம் | நவீனசந்தை, சாவகச்சேரி | 500 ரூபா |
| சீதா ஜுவல்லறி | நவீனசந்தை, சாவகச்சேரி | 2000 ரூபா |
| இராசம்மா சின்னத்தம்பி | தொப்பு வீதி, சாவகச்சேரி | 1000 ரூபா |
| ஜீவா எலக்ரிக்ஸ் | கண்டி வீதி, கைதடி | 5000 ரூபா |
| சிவலக்ஸ்மி ரேடர்ஸ் | 131 மு.மு.ளு வீதி யாழ்ப்பாணம் | 10 கிலோ அரிசி |
| விசாகன் ரேடர்ஸ் | K.K.S வீதி யாழ்ப்பாணம் | 20 கிலோ அரிசி |
| ராகலக்ஸ்மி ஹாட்வெயார் | K.K.S வீதி யாழ்ப்பாணம் | 500 ரூபா |
| றோயல் எலற்றிக்கல் | K.K.S வீதி யாழ்ப்பாணம் | 500 ரூபா |
| நியு சிறி சூ பலர்ஸ் | கொடிகாமம் வீதி நெல்லியடி | 500 ரூபா |
| அம்பிகை நகைமாளிகை | கொடிகாமம் வீதி நெல்லியடி | 2500 ரூபா |
| வரசன் எலகறோனிக்ஸ் | கொடிகாமம் வீதி நெல்லியடி | 500 ரூபா |
| S.சதீஸ் | வதிரி கரவெட்டி | 500 ரூபா |
| சிதம்பரபிள்ளை புத்தகசாலை | பருத்தித்துறை வீதி நெல்லியடி | 1000 ரூபா |
| மங்கை அழகுமாடம் | பருத்தித்துறை வீதி நெல்லியடி | 1000 ரூபா |
| கலைவாணி கண்ணாடிக் களஞ்சியம் | பருத்தித்துறை வீதி நெல்லியடி | 1000 ரூபா |
| சிறி சக்தி மாடம் | பருத்தித்துறை வீதி நெல்லியடி | 1000 ரூபா |
| கனேசன் ஹாட்வெயார் | பருத்தித்துறை வீதி நெல்லியடி | 500 ரூபா |
| P.விக்னேஸவரி | பண்டித்தரை, நெல்லியடி | 500 ரூபா |
| v.m. k new juwejers | சாவகச்சேரி | 2000 ரூபா |

| | | |
|---|---|---|
| சத்தி வநாகர் ஸ்ரோர் | சாவகச்சேரி | 300ரூபா |
| விநாயகர் கட்டடப் பொருள் வ. நி | சாவகச்சேரி | 500ரூபா |
| ஈசன் களஞ்சியம் | சாவகச்சேரி | 500ரூபா |
| கருணாநிதி | சாவகச்சேரி | 500 ரூபா |
| சபாரத்தினம் | சாவகச்சேரி | 1000 ரூபா |
| பொதிகை | சாவகச்சேரி | 1000 ரூபா |
| கரன் வர்த்தகம் நிலையம் | சாவகச்சேரி | 500 ரூபா |
| இம்சன் ஜவல்லர்ஸ" | சாவகச்சேரி | 500 ரூபா |
| nila tex | சாவகச்சேரி | 500 ரூபா |
| Araththarana tex | சாவகச்சேரி | 500 ரு |
| அம்பிகா மருந்தகம் | சாவகச்சேரி | 1000ரூபா |
| ஜெயாஸ் ரெக்ஸ் | நெல்லியடி | 500ரு |
| தாட்சா எலற்றோனிக். | நெல்லியடி | 500ரு |
| சரவணா மகாலட்ஸ்மி நகை மாடம் | நெல்லியடி | 2500ரு |
| விண்மீன் அங்காடி | நெல்லியடி | 1000ரு |
| யசோ ரெக்ஸ் | நெல்லியடி | 500ரு |
| செல்லமுத்துஸ் புடைவை | நெல்லியடி | 1000ரு |
| அருண் ரெக்ஸ் | நெல்லியடி | 500 ரு |
| மயூரா உணவகம் | நெல்லியடி | 500ரு |
| ஜனனி நகைமாடம் | நெல்லியடி | 3000ரு |
| பவாணி நகைமாடம் | நெல்லியடி | 1000ரு |
| அம்பாள் வெற்றிலைக்கடை | மந்திகை | 1000ரு |
| | மந்திகை | 500ரு |
| மந்திகை பாமசி | மந்திகை | 500ரு |
| அபிராமி இரும்பகம் | பருத்தித்துறை | 1 மூடை அரிசி |
| சுசிலா ஆபரணமாளிகை | பருத்தித்துறை | 1 மூடை அரிசி |
| வாணி நகைமாளிகை | பருத்தித்துறை | 1மூடை அரிசி |
| ஈஸ்வரி நகை அகம் | பருத்தித்துறை | 500ரூபா |
| காஞ்சனா நகைமாளிகை | பருத்தித்துறை | 1000ரு |
| கணேசா நகைமாளிகை | பருத்தித்துறை | 500ரு |
| செல்லமணி பழக்கடை | பருத்தித்துறை | 2 மூடை அரிசி |
| அம்மா சிற்றுண்டியகம் | பருத்தித்துறை | 400ரு |
| சந்நிதியான் மருந்தகம் | பருத்தித்துறை | 500ரு |
| குமாரி ஸ்ரோர்ஸ் | பருத்தித்துறை | 10000ரு |
| கண்ணன் போட்டோ கொப்பி | பருத்தித்துறை | 1மூடை அரிசி |
| நிதர்ஸ்சன் கிறிம் கவுஸ் | பருத்தித்துறை | 1மூடை அரிசி |
| மகாலட்சுமி | பருத்தித்துறை | 1மூடை அரிசி |
| வேலன் ஸ்ரோர்ஸ் | பரு | 1மூடை அரிசி |
| மகாமாரி பல்பொருள் | பருத்தி | 10 கிலோ அரிசி |
| தயா ஸ்ரோர்ஸ் | பருத்தி | 500ரு |
| நந்தனாஸ் | பருத்தி | 1000ரு |
| ஆனந்தம் வெற்றிலைக்டை | பருத்தி | 500ரு |
| வரதமகள் ஆடையகம் | பருத்தி | 1மூடை அரிசி |
| அன்னை மருந்தகம் | பருத்தித் | 30 கிலோ அரிசி |
| வாசன் நகைத்தொழிலகம் | பருத்தித் | 500ரு |
| சிறி முருகன் மருந்தகம் | பருத்தித் | 1000ரு |
| நியுவே சொப்பிங் சென்றர் | பருத்தித் | 2000ரு |

| | | |
|---|---|---|
| குகன் ஸ்ரோஸ் | ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் | 50கிலோ அரிசி |
| ஸ்ரீ ரங்கம் | ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் | 50கிலோ அரிசி |
| அன்ன ராஜா ஸ்ரோஸ் | ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் | 5கிலோ பருப்பு |
| ஐங்கரன் ஸ்ரோஸ் | ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் | 50கிலோ அரிசி |
| லிட்ரோ காஸ் பொயின்ட் | ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் | 50கிலோ அரிசி |
| ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஸ்ரோஸ் | ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் | 50கிலோ அரிசி |
| ஸ்ரீ காமாட்சி | ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் | 50கிலோ அரிசி |
| மகாலட்சுமி ஸ்ரோஸ் | ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் | 50கிலோ அரிசி |
| அம்பாள் ஸ்ரோஸ் | ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் | 50கிலோ அரிசி |
| K.K கந்தையாப்பிள்ளை(KKK) | ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் | 50கிலோ அரிசி |
| மகாமாரி ஸ்ரோஸ் | ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் | 20கிலோ அரிசி |
| யோகு ரேடிங்கோ | ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் | ரூபா 1000.00 |
| பெட்டா எசன்ஸ் | ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் | 50கிலோ அரிசி |
| சிவா வர்த்தக நிலையம் | ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் | 50கிலோ அரிசி |
| சிவா நறுமணப் பூங்கா | ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் | ரூபா 1000.00 |
| திவ்வியா ஸ்ரோஸ் | k.k.s வீதி, யாழ்ப்பாணம் | 50கிலோ அரிசி |
| வேணி ஸ்ரோஸ் | k.k.s வீதி, யாழ்ப்பாணம் | பருப்பு |
| அன்னை நாகா பூட் சிட்டி | k.k.s வீதி, யாழ்ப்பாணம் | 50கிலோ அரிசி |
| சிங்கப்பூர் நகையகம் | கஸ்துரியார் வீதி, யாழ்ப்பாணம் | ரூபா 1000.00 |
| நியூ நதியா ஜிவல்லர்ஸ் | கஸ்துரியார் வீதி, யாழ்ப்பாணம் | ரூபா 10,000.00 |
| நியூ மைதிலி ஜிவல்லர்ஸ் | கஸ்துரியார் வீதி, யாழ்ப்பாணம் | ரூபா 5000.00 |
| மதுரா நகை மாடம் | கஸ்துரியார் வீதி, யாழ்ப்பாணம் | ரூபா 1000.00 |
| லலிதா ஜிவல்லர்ஸ் | கஸ்துரியார் வீதி, யாழ்ப்பாணம் | ரூபா 3000.00 |
| உதயா ஜிவல்லரிஸ் | கஸ்துரியார் வீதி, யாழ்ப்பாணம் | ரூபா 1000.00 |
| மைதிலி நகை மாடம் | கஸ்துரியார் வீதி, யாழ்ப்பாணம் | ரூபா 5000.00 |
| சுப லட்சுமி நகையகம் | கஸ்துரியார் வீதி, யாழ்ப்பாணம் | ரூபா 1000.00 |
| மயூரன்ஸ் ஜிவல்லரி | கஸ்துரியார் வீதி, யாழ்ப்பாணம் | ரூபா 1000.00 |
| சானுகா நகைமாடம் | கஸ்துரியார் வீதி, யாழ்ப்பாணம் | 50கிலோ அரிசி |
| நியூ பிரியங்கா ஜிவல்லரி | கஸ்துரியார் வீதி, யாழ்ப்பாணம் | ரூபா 1500.00 |
| மதனா நகையகம் | கஸ்துரியார் வீதி, யாழ்ப்பாணம் | ரூபா 500.00 |
| மகாநதி ஜிவல்லரி | கஸ்துரியார் வீதி, யாழ்ப்பாணம் | ரூபா 3500.00 |
| அருள் நிலா நகையகம் | கஸ்துரியார் வீதி, யாழ்ப்பாணம் | ரூபா 1000.00 |

| | | |
|---|---|---|
| பொன்னரசி நகையகம் | கஸ்துரியார் வீதி, யாழ்ப்பாணம் | ரூபா 1000.00 |
| முத்துமாரி நகைமாடம் | கஸ்துரியார் வீதி, யாழ்ப்பாணம் | ரூபா 1000.00 |
| V M K | கஸ்துரியார் வீதி, யாழ்ப்பாணம் | 100கிலோ அரிசி |
| J.டாமினி ஜிவல்லரி | கஸ்துரியார் வீதி, யாழ்ப்பாணம் | ரூபா 1000.00 |
| சக்தி ஜிவல்லரி | கஸ்துரியார் வீதி, யாழ்ப்பாணம் | ரூபா 2000.00 |
| ஸ்ரீ தேவி ஜிவல்லரி | கஸ்துரியார் வீதி, யாழ்ப்பாணம் | ரூபா 1000.00 |
| அம்பிகா நகை மாடம் | கஸ்துரியார் வீதி, யாழ்ப்பாணம் | ரூபா 1000.00 |
| சோபனா ஜிவல்லரி | கஸ்துரியார் வீதி, யாழ்ப்பாணம் | ரூபா 2000.00 |
| சாரங்கா நகையகம் | கஸ்துரியார் வீதி, யாழ்ப்பாணம் | 50கிலோ அரிசி |
| ஸ்ரீ மதனா ஜிவல்லரி | கஸ்துரியார் வீதி, யாழ்ப்பாணம் | ரூபா 1500.00 |
| தங்கமயில் ஜிவல்லரி | கஸ்துரியார் வீதி, யாழ்ப்பாணம் | ரூபா 500.00 |
| ஸ்ரீ சிவரஞ்சனா ஜிவல்லரி | கஸ்துரியார் வீதி, யாழ்ப்பாணம் | 50கிலோ அரிசி |
| லக்ஷ்மிகா ஜிவல்லரி | கஸ்துரியார் வீதி, யாழ்ப்பாணம் | ரூபா 500.00 |
| ஸ்ரீ துர்க்கா ஜிவல்லரி | கஸ்துரியார் வீதி, யாழ்ப்பாணம் | ரூபா 500.00 |
| ஜெனா ஜிவல்லரி | கஸ்துரியார் வீதி, யாழ்ப்பாணம் | ரூபா 500.00 |
| ஸ்ரீ மாதவன் சைக்கிள் பாட்ஸ் | கஸ்துரியார் வீதி, யாழ்ப்பாணம் | ரூபா 1000.00 |
| நித்திய லட்சுமி நகையகம் | கஸ்துரியார் வீதி, யாழ்ப்பாணம் | ரூபா 1000.00 |
| நியூ உதயா ஜிவல்லரி | மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் | ரூபா 3000.00 |
| சிற்றி ரெக்ஸ் | பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம் | ரூபா 1000.00 |
| சிவராதா புடவையகம் | பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம் | 50கிலோ அரிசி |
| மலர் ரெக்ஸ் | பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம் | 50கிலோ அரிசி |
| ஆறுமுகம் புடவையகம் | பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம் | ரூபா 1000.00 |
| மலயான் கபே | பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம் | 50கிலோ அரிசி |
| மகாராணி புடவையகம் | பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம் | 50கிலோ அரிசி |
| கமலேஸ்வரி புடவையகம் | பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம் | 50கிலோ அரிசி |
| சிவபதி புடவையகம் | பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம | ரூபா 300.00 |

| | | |
|---|---|---|
| லதா அழகு மாடம் | பருத்தி | 500ரு |
| கமலா புத்தகசாலை | பருத்தி | 500ரு |
| ராஜா சுவைச்சோலை | பருத்தித் | 1மூடை அரிசி |
| கிருஸ்ணா வெதுப்பகம் | பருத்தி | 500ரு |
| மாஸ் கடை | மந்திகை | 500ரு |
| பிரியங்கா உணவகம் | மந்திகை | 500ரு |
| பா. ஸ்ரீகந்தராஜா | மந்திகை | 5000ரு |
| மயூரன் ஸ்ரோர்ஸ் | சுன்னாகம் | 10 கிலோ அரிசி |
| யோகாஸ் ஸ்ரோர்ஸ் | சுன்னாகம் | 10 கிலோ அரிசி |
| சிவரூபன் | கிராமக்கோடு | 1மூடை அரிசி |
| மாணிக்கப்பிள்ளையார் | பருத்தி | 10 கிலோ அரிசி |
| கிருஸ்ணகுமார் | பருத்தி சந்தை | 50 கிலோ அரிசி |
| நந்தினி பழக்கடை | பருத்தி | 30 கிலோ அரிசி |
| புதிய குமாரி | பருத்தித் | 5 கிலோ பருப்பு |
| பாலசிங்கம் | கரவெட்டி | 10000ரு |
| த. சிவனடியார் | துன்னாலை மத்தி | 10000ரு |
| தமிழகன் | பருத்தி | 3000ரு |
| கு. சிறிஸ்கந்தராஜா | வவுனியா | 1000ரு |
| செ. யோகேஸ்வரன் குடும்பம் | உரும்பிராய் | 1000ரு |
| க.கோமகள் | சாவகச்சேரி | 1000ரு |
| அ துஸ்யந்தன் | கல்வியங்காடு | 1000ரு |
| காசி. கார்திகேசு. | தும்பளை | 500ரு |
| சி.சுரேந்திரன் | மாமுனை | 35000ரு |
| S. Jathvan | நெல்லியடி | 50000ரு |



தாயகம் டிஜிற்றல்
-யாழ்.பல்கலைக்கழகம் அருகில் -